Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 25, 2023

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 25, 2023 | ஒளி: 08 கதிர்: 256 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## தங்கத்தின் விலையில் மீண்டும் வீழ்ச்சி

உள்ளூர் சந்தையில் தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் விலை மீண்டும் சரிந்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெரு தங்க வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் விலை வீழ்ச்சி என்பனவே இந்த விலைக் குறைப்புக்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய 22 கரட் தங்க பவுணின் விலை 145 ஆயிரம் ரூபாயாகவும் 24 கரட் தங்கத்தின் வில 150 ஆயிரம் முதல் 155 ஆயிரம் ரூபாயாகவும் நேற்று பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

## ஹர்த்தாலுக்கு ஒத்துழையுங்கள்

### முன்னாள் எம்.பி சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை

க. அகரன்

புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராகவும் வடக்கு, கிழக்கிலே நடைபெறுகின்ற பௌத்தமயமாக்கல், ஆலயங்கள் இடிப்பது அல்லது பௌத்த சிலைகளை நிறுவுவது போன்ற அனைத்து விடயங்களுக்காகவும், பூரணமான கடையடைப்புக்கு பொதுமக்கள், பொது அமைப்புகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் முழுமையான ஒத்துழைப்பை, ஆதரவை வழங்க வேண்டும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இன்றையதினம் (25) இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி வவுனியாவில் திங்கட்கிழமை (24) இடம்பெற்ற துண்டுபிரசுரம் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு



ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "வடக்கு, கிழக்கிலே இன்றைய தினம் நடைபெற இருக்கின்ற நிர்வாக முடக்கலுக்காக வவுனியாவில் இருக்கக்கூடிய தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடி அரசாங்கம் கொண்டு வருகின்ற புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்படி துண்டுப்பிரசுரம் வழங்குகின்றோம்.

தொடர்ச்சி P2

## ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி துண்டுப்பிரசுர விநியோகம்



க. அகரன்

வடக்கு - கிழக்கில் இன்றையதினம் (25) முன்னெடுக்கவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி, வவுனியா நகர் பகுதியில் தமிழ் தேசிய கட்சிகள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்கள் என்பன இணைந்து திங்கட்கிழமை (24) துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தன.

வவுனியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கும் வவுனியா நகருக்கு வருகை தந்தவர்களுக்கும் இந்தத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் எமது இனத்திற்கு பாதகமான அதன் கடுமையான விளைவுகளை கருத்தில் கொண்டு அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு ஆதரவு கோரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## விபத்தில் சிக்கி மூளைச்சாவு: இளைஞனின் 5 உடல் உறுப்புகள் தானம்

ஏ.எச்.ஏ. ஹூஸைன்





மட்டக்களப்பு, சித்தாண்டியில் இடம்பெற்ற வீதி விபத்தில் உயிரிழந்த இளைஞனின் 5 உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டுள்ளதாக குறித்த இளைஞனின் சகோதரி தெரிவித்தார்.

வயல்வேலை முடித்துவிட்டு, கிரான் பகுதியிலிருந்து சித்தாண்டியிலுள்ள தனது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது இடம்பெற்ற விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான இந்திரசேன ரேனுஜன் (வயது 29) படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

## வட இலங்கை தனியார் பஸ் சங்கம் பூரண ஆதரவு

க. அகரன்

வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் இன்று (25) இடம்பெறவுள்ள ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைமையத்தில் திங்கட்கிழமை (24) இடம்பெற்ற கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில் வட இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க தலைவர் சி. சிவகரன், யாழ் பிராந்திய கூட்டு இணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இனையத்தின் தலைவர் பொ.கெங்காதரன், முல்லைத்தீவு மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் நா. சற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2

## 'கோட்டா கோ கம' விவகாரம்: தேஷபந்துவை கைதுசெய்ய தடையுத்தரவு பிறப்பிப்பு



கொழும்பு, காலி முகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம' போராட்டத் தளத்தின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில், மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோனை கைது செய்யவோ அல்லது சந்தேகநபராக பெயரிடவோ மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (24) இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது.

தொடர்ச்சி P2

## டயானாவை கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படாது

### சீஐடிக்கு அதிகாரம் உள்ளது என்று அறிவிப்பு

பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை, குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் கைது செய்வது தொடர்பான உத்தரவை நீதிமன்றம் பிறப்பிக்காது என்று கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், திங்கட்கிழமை (24) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## டப்புலவிடம் வாக்குமூலம் பெற இடைக்காலத் தடை



முன்னாள் சட்டமா அதிபர் டப்புல டி லிவேராவை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்வதையோ அல்லது வாக்குமூலம் பதிவு செய்வதையோ தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம், திங்கட்கிழமை (24) இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து வெளிட்ட கருத்து தொடர்பில் வாக்குமூலம் வழங்க ஏப்ரல் 19, 21 ஆகிய திகதிகளில் லிவேராவை ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர் ஆஜராகத் தவறியதையடுத்து, திங்கட்கிழமை (24) ரிஐடிக்கு வருகை தரத் தவறினால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விவகாரம்: நிபந்தனைகள் இன்றி 6.4 பில். பெற்றிருக்கலாம்

### பாரிய ஊழல் என்கிறார் பீரிஸ்



'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் உரிமையாளர்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து சுமார் 6.4 பில்லியன் அமெரிக்க டொலரை அரசாங்கம் பெறும் வாய்ப்பு கிடைத்ததாகவும் நான்கு ஆண்டுகளில் பெறப்படும் தொகையை விட, இரண்டு மடங்கு அதிகம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர மக்கள் கூட்டமைப்பின் தலைமை அலுவலகத்தில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை

தொடர்ச்சி P2

## வெடுக்குநாறிக்கு வழிபடச் செல்லும் பக்தர்களை தடுக்கக் கூடாது

### வவுனியா நீதிமன்றம் உத்தரவு

க. அகரன்

வெடுக்குநாறி பிரதேசத்தில் வழிபாடுகளை நடத்துவதற்காக பக்தர்கள் செல்வதை, எந்த அரச அதிகாரியும் தடுக்கக் கூடாது என்ற உத்தரவு, வவுனியா நீதவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை, வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றதன் பின்னர், வழக்கில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன் ஊடகங்களுக்கு மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "இந்த வழக்கில் இனந்தெரியாத நபர்களால் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பாக, பொலிஸார் தகவல் கொடுத்துள்ளார்கள். ஆனால், எவரும் கைது செய்யப்படவில்லை. யாரென்று தெரியாது, விசாரணைகளை தொடர்ந்து முன்னேடுப்பதாக சொல்கின்றனர்.

கடந்த தினத்தில் மேலதிகமாக அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டதற்கமைவாக இன்று (நேற்று) குறித்த இடத்தில் நீண்டகாலமாக பூசை வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களை அவர்களே சமர்ப்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## ஹம்பாந்தோட்டையிலும் கம்பளையிலும் அதிர்வு

நவி



ஹம்பாந்தோட்டை மற்றும் கம்பளை ஆகிய பகுதிகளில் திங்கட்கிழமை (24) சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் உணரப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## ஓரணியில் நிற்க எதிரணிகள் உறுதி

### ஜனாதிபதி விசேட உரை

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் பாராளுமன்றம் இன்று (25) கூடவிருக்கின்றது. இதன்போது, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் சபையில் சமர்ப்பிக்க உள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியம் விதித்திருக்கும் நிபந்தனைகள் தொடர்பிலான விவாதம் வியாழக்கிழமை (26) நடத்தப்படும். இதில், தாங்கள் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பில் எதிர்க்கட்சிகள், கொழும்பில் நேற்று (24) இரவு கூடி ஆராய்ந்தன. இந்நிலையில், பாராளுமன்றத்தில் நேற்று (24) பிற்பகல் ஒன்றுகூடிய எதிரணி கட்சிகளின் தலைவர்கள், தாங்கள் அனைவரும் ஓரணியில் நிற்பதற்கு உறுதிபூண்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## "எமது மக்களிடம் சஜித் மன்னிப்பு கோர வேண்டும்"

### இன்றுவரை அதிருப்தி என்கிறார் வடிவேல் சுரேஷ்




பசறை, மடுல்சீமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு வருகை தாராத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எனது மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்று தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ், என் மக்களின் முடிவே என் தீர்க்கமான அடுத்த கட்ட அரசியல் நகர்வு என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வெப்பமான வானிலை சில நாள்கள் தொடரும்

### நீரிழப்பை தவிர்க்குமாறு எச்சரிக்கை



நாட்டில் நிலவும் வெப்பமான வானிலை அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ள நிலையில், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெற்று வருபவர்கள் நீரிழப்பு அபாயத்தில் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

நீரிழப்பு அபாயத்தில் உள்ள தரப்பினர் வெயிலில் நடமாடுவதை குறைப்பதுடன், அதிகளவில் நீரை அருந்தி நீரேற்றத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பாடசாலை மாணவர்களை வெளிப்புற நடவடிக்கைகளில் இருந்து, குறிப்பாக அத்தியாவசியமற்ற வெளிப்புற செயற்பாடுகளில் இருந்து விலக்கி வைக்குமாறும் வைத்திய நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஹர்த்தாலுக்கு ஆதரவு கோரி துண்டுப்பிரசுரம் விநியோகம்

எமது இனத்தின் இருப்பை கேள்விக்குறியாக்கும் பேரினவாத அரசின் திட்டமிட்ட, இந்நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்களின் வரலாற்றை சிதைக்கும் அரசின் அனைத்து கட்டமைப்புகளின் செயற்பாட்டை எதிர்க்க, இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

குறித்த துண்டுப்பிரசுரம் வழங்கும் நிகழ்வில் முன்னாள் எம்.பியான சிவசக்தி ஆனந்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி, தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட கிளையின் செயலாளர் ந.கருணாநிதி உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் அனுஷ்டிக்க ஆதரவு கோரி 6 கட்சிகளான இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன கூட்டாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹர்த்தாலுக்கு ஒத்துழையுங்கள்

கடந்த 4தசாப்தங்களுக்கு மேலாக இந்த பயங்கரவாத தடைச்சட்டம் எந்த அளவு தூரம் தமிழ் மக்களை பாதித்திருக்கிறது, எவ்வளவு தூரம் உயிரிழப்புகள், சொத்தழிவுகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதனை நாங்கள் அனுபவித்திருக்கின்றோம்.

அதைவிட மிக மோசமான முறையிலே இந்த பயங்கரவாத தடை சட்டம் பாராளுமன்றத்திலே கொண்டு வரப்பட இருக்கின்றது. ஆகவே பாராளுமன்றத்திலே இருக்கக்கூடிய அனைத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த புதிய பயங்கரவாத தடை சட்டத்துக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

இதுவரை காலமும் தமிழ் மக்கள்தான் இந்த பயங்கரவாத தடை சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இனியும் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைவிட இனிவரும் காலத்தில் தெற்கிலே இருக்கக்கூடிய சிங்கள முற்போக்கு சிவில் சமூகத்தை சேர்ந்தவர்கள், மாணவர்கள் இந்த புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட இருக்கிறார்கள்.

ஆகவே தமிழ் மக்கள் இதுவரை காலமும் சட்டத்தால் எந்தளவு தூரம் பாதிக்கப்பட்டார்களோ அதைவிட மோசமான அளவுக்கு தெற்கில் இருக்கக்கூடிய சிங்களவர்களும் பாதிக்கப்பட இருக்கிறபடியால் ஆகவே தமிழ், சிங்கள, முஸ்லிம் எம்.பிக்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும். பயங்கரவாத தடை சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும்" என்றார்.

## தங்கத்தின் விலையில் மீண்டும் வீழ்ச்சி

உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலை 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விலையிலிருந்து கணிசமாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இளைஞனின் 5 உடல் உறுப்புகள் தானம்

பிரதான வீதியில் கிரானுக்கும் சித்தாண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்ற இந்த விபத்தின்போது படுகாயடைந்த அவர், மூளைச் சாவு அடைந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததை அடுத்து வைத்தியர்களின் ஆலோசனையுடன் அவரது உடலுறுப்புகளைத் தானம் செய்ய குடும்பத்தினர் முன்வந்துள்ளனர்.

அதனடிப்படையில் மூளைச் சாவடைந்த ரேனுஜனின் சிறு நீரகங்கள், கல்லீரல், நுரையீரல், இதயம் ஆகிய அவயவங்கள் தேவையுடையோருக்கு பொருத்தும் வகையில் தானம் செய்யப்பட்டதாக ரேனுஜனின் சகோதரி இந்திரசேன கிரிஷாந்தினி தெரிவித்தார்.

தமது சகோதரனை இழந்தது ஆறாத் துயரமாக இருந்த போதிலும் தமது சகோதரனின் உடல் உறுப்புகள் 5 பேருக்கு வாழ்வளிக்கும் என்பதில் தமது சகோதரன் சாகா வரம் பெற்றுள்ளதாக நினைத்து தமது குடும்பத்தினர் பெருமையடைவதாக கிரிஷாந்தினி தெரிவித்தார்.

அத்துடன் இதுபோன்று உடலுறுப்புக்களைத் தானம் செய்ய தாமும் தமது குடும்பத்தவர்களும் சித்தமாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே எப்போதும் பொது நலனில் அக்கறைகொண்டுள்ள கிரிஷாந்தினி, கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இரத்த தானம் செய்து வருகிறார்.

ரேனுஜனின் உடல் அதிகளவானோரின் பங்கேற்புடன் சனிக்கிழமை (22) சித்தாண்டியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய மற்றைய மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## வட இலங்கை தனியார் பஸ் சங்கம் பூரண ஆதரவு

மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் பு. நாகரூபன், வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். ரி. ராஜேஸ்வரன், கிளிநொச்சி தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தி. கிருஷ்ணன் ரூபன் ஆகியோர் குறித்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஓரணியில் நிற்க எதிரணிகள் உறுதி

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று (25) பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றவுள்ளார். அதில், தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு பகிரங்க அழைப்பை விடுக்கவுள்ளார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தேஷபந்துவை கைதுசெய்ய தடையுத்தரவு பிறப்பிப்பு

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.ஏ.ஆர் மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாமினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் திகதியன்று போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து, தேஷபந்து தென்னகோனை சந்தேகநபராகப் பெயரிடுமாறு சட்டமா அதிபரால் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்குமாறு தேஷபந்து தென்னகோனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை பரிசீலித்த நீதியரசர்கள் குழாம், தென்னகோனை கைது செய்யவோ அல்லது சந்தேகநபராக பெயரிடவோ இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளதுடன், குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு அனுப்பிய கடிதத்தை நடைமுறைப்படுத்துவதை தடுக்கும் வகையில் உத்தரவிட்டுள்ளது.

## டயானாவை கைது செய்யும் உத்தரவு பிறப்பிக்கப்படாது

குற்றச்சாட்டுகள் குறித்து கைது செய்வது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீதவான் சுட்டிக்காட்டினார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தின் கீழ் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை கைது செய்ய உத்தரவிடுமாறு முறைப்பாட்டாளர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்செகுலரத்ன மற்றும் உதார முஹந்திரம்கே தலைமையிலான சட்டத்தரணிகள் குழு மன்றில் கோரியது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 32ஆவது பிரிவின் கீழ் டயானா கமகேவை கைது செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு மனுதாரர் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அரச தரப்பு முடிக்காத காரணத்தால், குறித்த பிரிவின் கீழ் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்காது என்றும் அறிவித்தார்.

டயானா கமகே இரட்டைக் குடியுரிமை அந்தஸ்து இல்லாமல் இலங்கையில் வசிக்கும் பிரித்தானியப் பிரஜை என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு பொய்யான தகவல்களை வழங்கி இலங்கை கடவுச்சீட்டை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்து சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

## டப்புலவிடம் வாக்குமூலம் பெற இடைக்காலத் தடை

இந்நிலையிலேயே, பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் வாக்குமூலம் வழங்குவதற்காக தனக்கு விடுக்கப்பட்ட அழைப்பாணையை சவாலுக்கு உட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தனது சட்டத்தரணிகள் ஊடாக லிவேரா, மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை பரிசீலித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய குழாம் மேற்குறிப்பிட்ட உத்தரவைப் பிறப்பித்தது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் பாரிய சதித்திட்டமொன்று காணப்படுவதாக முன்னாள் சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, 2021 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி தெரிவித்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்ற விதம், நேரம், தினம் மற்றும் ஏனைய விடயங்கள் அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைத்தமையின் ஊடாக பாரிய சதித்திட்டமொன்று இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருக்கின்றமை வெளிப்படுவதாகவும் இந்தப் பாரிய சதித்திட்டத்துடன் தொடர்புடைய அனைவரும் சாட்சியங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

## ஹம்பாந்தோட்டையிலும் கம்பளையிலும் அதிர்வு

ஹம்பாந்தோட்டையில் திங்கட்கிழமை (24) அதிகாலை 12.45 மணியளவில் 4.4 மெக்னிடியுட் அளவிலான நடுக்கம் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்தது.

ஹம்பாந்தோட்டை கடற்கரையிலிருந்து 25.8 கிலோ மீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாகவும் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி அபாயம் எதுவும் இல்லை என்பதால் பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் பணியகம் கேட்டுக்கொண்டது.

இதேவேளை, கம்பளை, புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஜீ.கே, டிவிசனில் உள்ள வீடுகளில் அதிகாலை சுமார் 12.45 மணியளவில் திடீரென நிலநடுக்கம் உணரப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீடொன்றின் மதிலில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வளவு காலமும் இது போன்ற சம்பவம் இந்தப் பகுதியில் ஏற்படவில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வெப்பமான வானிலை சில நாள்கள் தொடரும்

இதேவேளை, அநுராதபுரம், இரத்தினபுரி, வவுனியா போன்ற மாவட்டங்களில் சராசரி வெப்பநிலையை விட அதிக வெப்பம் பதிவாகியுள்ளதாவும் வடக்கு, வடமத்திய, வடமேல், கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி மாவட்டங்களிலும் அதிக வெப்பநிலை நிலவும் என்றும் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எனவே, பொதுமக்கள் வெப்பம் தொடர்பான நோய்களில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## பக்தர்களை தடுக்கக் கூடாது

அதுமட்டுமன்றி இது தொல்லியலுக்குரிய பிரதேசமென்றும் இன்று நாங்கள் செய்த விண்ணப்பத்திற்கு பதில் அளிப்பதற்கு அரச சட்டத்தரணியும் உதவியை நாடியுள்ளதாகவும் அதற்காக பிறிதொரு தினத்தையும் கேட்டிருந்தார்கள்.

எமது அரசியலமைப்பின் 10 ஆம் 14:1 (உ) உறுப்புரைகளின் கீழ் மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமைகள். மரத்தையோ கல்லையோ வழிபடலாம்; அதற்கு பூரண உரித்துள்ளது. அந்த மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது.

ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காக அதனை வணங்க முடியாது என எவரும் கூற முடியாது. அவ்வாறு சொல்வதாக இருந்தால் அநுராதபுரத்திலும் பொலன்நறுவையிலும் சென்று எவரும் வழிபட முடியாது.

இந்த விடயங்கள் இன்று (நேற்று) நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர், அதாவது வெடுக்குநாறி பிரதேசத்திலே வணக்கங்களை நடத்துவதற்கு பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்க கூடாது என்ற உத்தரவு கொடுக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடைக்கப்பட்ட சிலைகளை மீளக் கட்டுவது சம்பந்தமாக, தொல்லியல் பிரதேசம் என்ற காரணத்தால், அரச சட்டத்தரணியும் வந்த பிறகு ஒரு விண்ணப்பத்தை செய்வதாக சொல்லியிருக்கின்றேன்" என்றார்.

## "எமது மக்களிடம் சஜித் மன்னிப்பு கோர வேண்டும்"

பசறை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பசறை, மடுல்சீமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் வருகை தராமையானது மக்கள் மத்தியில் இன்றளவும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்து பதவிகளில் இருந்தும் நான் விலகி இருந்தேன். இவ்விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் என் மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

வரும் நாள்கள் அரசியல் களத்தில் பல புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்களாகும். எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தில் நடைபெறும் வாத விவாதங்களை அவதானித்து சர்வதேச நாணய நிதியத்துக்கு வாக்களிப்பது தொடர்பில் நான் ஆராய்வேன்.

எது எவ்வாறாக இருப்பினும் என் மக்களுக்கு எதிரான எந்த ஒரு சட்டத்துக்கும் நான் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை. பட்டம், பதவி, கட்சிகள், வண்ணங்கள் தேவையில்லை. என் மக்களின் தீர்மானமே என் அடுத்த கட்ட அரசியல் நகர்வின் தீர்க்கமான முடிவாக அமையும்" என்றார்.

## நிபந்தனைகள் இன்றி 6.4 பில். பெற்றிருக்கலாம்

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் கிடைக்கும் நிதிக்கு வட்டிகட்ட வேண்டும் என்றும் 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலால் ஏற்பட்ட மாசுபாட்டுக்கு கிடைக்கும் இழப்பீடு நாட்டுக்கு சொந்தமான பணம் என்பதால் திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்தார்.

கப்பல் விபத்து நடந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கடந்துவிட்டாலும் எதுவும் செய்யப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய அவர், இழப்பீட்டை பெற்றுக்கொள்ள அரசாங்கம் உழைக்கவில்லை என்றார்.

அதற்குப் பதிலாக சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாட்டுக்கு வந்துள்ள அரசாங்கம், மக்களை பலிகடா ஆக்கியுள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய கப்பல் உரிமையாளர்கள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து சுமார் 6.4 பில்லியன் அமெரிக்க டொலரை அரசாங்கம் பெறும் வாய்ப்பு கிடைத்ததாகவும் 4 ஆண்டுகளில் பெறப்படும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகம் என்றும் சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூரில் வழக்குத் தொடுப்பதன் மூலம் அதிக டொலரை செலவிட நேரிடும் என்று குறிப்பிட்ட அவர், இந்தச் சம்பவம் இலங்கை கடற்பரப்பில் ஏற்பட்டுள்ளதால் இலங்கையில் வழக்கு தொடர வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

நாட்டிற்கு சொந்தமான 6.4 பில்லியன் டொலரை தடுக்கும் வகையில் 250 மில்லியன் டொலர் பிரித்தானிய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ ஆதாரங்களுடன் குற்றம் சுமத்தியுள்ளார் என்றும் நாடு வங்குரோத்து அடையும் சந்தர்ப்பத்திலும் தமது சட்டைப் பையை நிரப்பும் தாகம் தீரவில்லை என்றும் பீரிஸ் குறிப்பிட்டார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு

# பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக்கூடாது

**யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கோரிக்கை**

நிதர்சன் வினோத்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், மாணவர் சமூகத்துக்குப் பாரதூரமானது. இச்சட்டத்தை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த ஆட்சியாளர்கள் முன் வந்தால், வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் மாணவர்களின் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நேற்று (24) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது மேலும் தெரிவிக்கையில், தொடர்ச்சியாக தமிழ் மக்களுடைய பிரச்சினையானது, அடக்கு முறையாக கையாளப்படுகின்றது.

அந்தவகையில், பயங்கரவாத தடைச் சட்டம் என்ற வகையில் 44 வருடமாக எங்களுடைய மக்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டிருந்த பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாறாக, இப்பொழுது ஒரு சட்டமூலம் வந்திருக்கின்றது.

அந்தச் சட்டம் மூலம் எங்களை அடக்குவதற்கான சட்டமூலமாகும். அதாவது, ஒரு மனிதன் சுதந்திரமாக, ஜனநாயக ரீதியாக தன்னுடைய கருத்தை தெரிவிப்பதற்கு எதிராக, கடுமையாக இயற்றப்பட்ட சட்டமூலமாகவே இது காணப்படுகிறது.

ஜனநாயக ரீதியாக போராடுகின்ற மாணவர்களை கைது செய்து இதன் மூலம் அச்சுறுத்தப்படுகின்றார்கள். அந்த வகையில், புதிதாக வரவிருக்கின்ற இந்தச் சட்டமூலத்தை சர்வதேசம் தலையிட்டு நிறுத்த வேண்டும்.

இலங்கை பாராளுமன்றத்தில், இந்தச் சட்டமூலத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்கக்கூடாது. ஆகவே, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முற்றாக எதிர்கின்றது. தொடர்சியாக இப் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீதான நகர்வுகள் அதனை நடைமுறைபடுத்த முன்னெடுக்கப்படுமானால் வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் பல்கலைக்கழக மாணவர்களாக முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார் .

# உடல் சுகாதார கருத்தமர்வு

மன்னார் நிருபர்

தனி நபர் உடல் சுகாதாரம் தொடர்பான கருத்தமர்வு வெள்ளிக்கிழமை (21) மன்னார் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. வாழ்வுதயம் சூழல் பாதுகாப்பு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு பதில் இயக்குநர் அருட்தந்தை அருள்ராஜ் குரூஸ் தலைமை தாங்கினார். டொக்டர் ஜோயால் இக்கருத்தமர்வானது முன்னெடுக்கப்பட்டது.

தற்காலத்தில் சிறியோர் தொடங்கி முதியவர்கள் வரை முகம் கொடுக்கும் உடல் சுகாதார பிரச்சினைகள், அவற்றுக்கான காரணங்கள், அவற்றை தவிர்த்து கொள்வதற்கான செயற்பாடுகள் எனப் பல விடயங்கள் இக்கருத்தமர்வில் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

குறித்த கருத்தமர்வில் சவுத் பார், கீரி, வேப்பங்குளம், காத்தான்குளம், மடுறோட் ஆகிய இலக்கு கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர், இளையோர், வாழ்வுதயப் பணியாளர்கள் என 54 பயனாளிகள் பங்குபற்றி பயன் பெற்றுக்கொண்டனர்.

# "எதிர்காலம் சிக்கலாகும்"

**ஜனாதிபதியிடம் சொன்னார் சதா**

எஸ்.கே.குமார்

பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் எதிர்காலத்தில் பெருந்தோட்ட தேயிலை உற்பத்தியில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டு தேயிலை தோட்டங்கள் மூடும் நிலை ஏற்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் கொண்டுவந்துள்ளார்.

தற்பொழுது இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதன் மூலம் வெளிநாட்டு டொலர் கிடைக்கின்றது. ஆனால் எதிர்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு தேயிலை இறக்குமதி செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி தலையிட்டு இந்தப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

நுவரெலியா நகர அபிவிருத்தி தொடர்பாகவும் நீண்ட நேரம் உரையாடினோம் என்று தெரிவித்த சதாசிவம், இன்று பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஆயிரம் ரூபாய் சம்பளம் இன்றைய பொருட்களின் விலைகளின் விலை உயர்வை பார்க்கும் பொழுது பொதுமானதல்ல. அதேவேளை ஒரு சில



தோட்டங்களில் மாத்திரம் ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. 90 சதவீதம் பெருந் தோட்டங்களில் அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பளம் வழங்கப் படுவதில்லை என சுட்டிக்காட்டினேன் என்றார்.

இந்த அதிகரிக்கப்பட்ட ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்க முடியாதென பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் நீதி மன்றம் சென்றுள்ளார்கள். இன்றைய வாழ்க்கை செலவு புள்ளி அதிகரித்திருக்கும் இந்தச் சூழ்நிலையில் மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் தோட்ட தொழிலை விட்டு வெளியில் வேலைக்கு செல்கின்றார்கள். இந்த நிலைமை தொடருமாயின் தேயிலை தொழில்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என்றும் எடுத்துரைத்தேன் என சதாசிவம் தெரிவித்தார்.

# கல்முனை மாநகர ஆணையாளருக்கு கௌரவம்

நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக கடமையேற்று, வினைத்திறனாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் இலங்கை நிர்வாக சேவை தரம் ஒன்றை சேர்ந்த ஏ. எல். எம் அஸ்மியின் சேவையைப் பாராட்டி கல்முனை மாநகர மக்களால் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆஷாத் ப்ளாஸா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற கல்முனையன்ஸ் போரத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வின் போதே இக்கௌரவம் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது.

மட்டு. போதனா வைத்தியசாலையில்

# அடையாளம் காணப்படாத சடலங்கள்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு நகர், முனைவீதி இரண்டாம் குறுக்கு வீதியில் உயிரிழந்த நிலையில் ஆணிண் சடலம் நேற்று (24) மீட்டகப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த நபர், நகர் பகுதியில் பிச்சை எடுத்து வந்ததாகவும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலம் மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மார்ச் மாதம் 25ஆம் திகதி, காந்தி பூங்காவின் முன்னால் உள்ள வாவியில் சடலமாக மீட்கப்பட் பெண் ஒருவரின் சடலமும் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில் மட்டு. போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. எனவே, இவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் அறிவிக்குமாறு, பொதுமக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு முன்னர்

# ஊழல் எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வந்து ஊழல்வாதிகளை தண்டிக்கவும்

ஹஸ்பர்

நீதி அமைச்சரால் முன் மொழியப்பட இருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நாட்டுக்கு நன்மை தருமா என திருகோணமலை மாவட்ட அனைத்து பள்ளிவாயல்களின் சம்மேளன செயலாளர் எம்.எம்.மஹ்தி கேள்வி எழுப்பி உள்ளார்.

நேற்று (24)அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில், நாட்டுக்கான சட்டம் என்பது அனைத்து இன மக்களுக்கும் சமமாக பயன்படுத்தப்பட வேண்டுமே தவிர, அது சிறுபான்மை சமூகத்தையும் எதிர்க்கட்சி அரசியல் தரப்பினரையும் அடக்கி, நசுக்குகின்ற தன்மை கொண்டதாக இருக்கக் கூடாது.

கடந்த காலங்களில் முஸ்லிம், தமிழ் சமூகங்களும் அரசியல் எதிரிகளும், சிறுபான்மை தலைமைகளும் பயங்கரவாத தடை சட்டம் என்ற ஒன்றால் அநியாயமாக பழிவாங்கப்பட்டார்கள். தற்போது கொண்டு வரப்பட இருக்கின்ற பயங்கரவாத எதிர்ப்பு சட்டமும் அவ்வாறான தன்மைகளை கொண்டிருக்கக் கூடாது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வருவதற்கு முன்னர் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வந்து கொள்ளையடிக்கப் பட்ட நாட்டின் தேசிய சொத்துகளை தேசிய உடைமைகளாக்குவதோடு ஊழல்வாதிகளை தண்டிக்கவும் வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் மும்மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

ராமு தனராஜா

கந்தகெடிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கனுவவன்வ பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (23) மாலை கேபிள் அன்டனா பொருத்தச் சென்ற போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை, கன்வன்வ - மஹியங்கன வீதியில் 16 கட்டையில் வசிக்கும் 56 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.



மரத்தின் மீதேறி அன்டனா வயரை தூக்கி எறிந்தபோது, உயர் அழுத்த மின்கம்பியில் அந்த வயர் விழுந்தததில் மின்சாரம் பாய்ந்தது என தெரியவருகின்றது.

சடலம், பதுளை பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# பொலிஸாரை தாக்கியவர் கைது

டி சந்ரு

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை சமரசம் செய்ய தலையிட்ட பொலிஸ் உத்தியோகத்தரை தாக்கினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா வசந்த கால திடலில் (22) இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாகொல பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



ஏனைய சந்தேகநபர்கள் பிரதேசத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இயற்கையை சீண்டிப் பார்த்ததன் விளைவையே அனுபவிக்கின்றான்

மழை பெய்தால் ஒரேடியாக பெய்கிறது; இல்லையேல் வெயில் கொளுத்துகின்றது என ஊர்வழிகளில் பேசிக்கொள்வதை கேள்விப்பட்டிருக்கின்றோம். நமது நாட்டை பொறுத்தவரையில், டிசெம்பர்- பெப்ரவரி மாதங்களுக்கு இடையில் வரட்சியான வானிலை நிலவும்.

இரண்டொரு மாதங்களுக்கு வெயில் நீடிக்குமாயின், பல்லின சமூகம் வாழும் நமது நாட்டைப் பொறுத்தவரையில் அந்தந்த சமயங்களைச் சேர்ந்தவர்கள், மழை வேண்டி தங்களுடைய குல தெய்வங்களை வழிபடுவார்கள். தங்களுக்குத் தண்ணீர் இல்லாவிடினும் பரவாயில்லை, தெய்வங்களை குளிரூட்ட வேண்டுமெனக்கூறி தண்ணீர் குட பவனியை இந்துக்கள் மேற்கொள்வர்.

நடப்பாண்டை பொறுத்தவரையில், வெயிலின் தாக்கத்தை தாங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதுவரையிலும் இருவர் மரணமடைந்துள்ளனர். இந்தியாவை பொறுத்தவரையில் வெயிலால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை கடந்தகாலங்களில் அதிகரித்தே காணப்பட்டது.

இந்தியாவின் சில மாநிலங்களில் 40 பாகை செல்சியஸுக்கும் அதிகமாக வெயிலின் தாக்கம் இருக்கும்; அனல்காற்றும் வீசும். நமது நாட்டில் அவ்வாறானதொரு நிலைமை இல்லை. எனினும், வெயிலின் தாக்கம் அதிகமாகும்.

சிறுவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் ஆகக்கூடுதலாக கவனமாக இருக்கவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாலை மூன்று மணிவரையில் சிறுவர்களை வெளியில் அனுப்பாமல் நிழலான இடங்களில் வைத்திருக்குமாறு சுகாதார தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இயற்கையின் மீது தன்னுடைய முழுமையான அட்டகாசத்தை மனிதன் புரியும் போதுதான், மனிதனுக்கு எதிராக இயற்கை திரும்பிக்கொள்கின்றது. அதன்போது, இயற்கையை சூறையாடியவர்கள் மட்டுமன்றி சகலரும் பாதிக்கப்படுகின்றனர்.

ஏதோவொரு தேவைக்காகவும் வெட்டும் மரமொன்றுக்காக, மரக்கன்றொன்றை நாட்டி இருப்பார்களாயின், வெயிலின் தாக்கத்தை இந்தளவுக்கு எதிர்கொள்ளவேண்டிய நிலை இருந்திருக்காது. ஆக, அனுபவித்தே ஆகவேண்டும்.

எனினும், இயற்கையின் மீது தாக்கத்தை செலுத்தாது. இயற்கையின் சமநிலையை பேணும் மிருகங்களும் நீரின்றி தவிக்கின்றன. நீர்நிலைகளை நோக்கி மிருகங்கள் படையெடுக்கின்றன. நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்துகொண்டே செல்கின்றது.

நீர்மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்தால், மின்சார உற்பத்தி குறைவடையும்; மின்வெட்டு அமலாகும். அது, தற்போதைய வெப்பநிலை இரட்டிப்பாக்கிவிடும். மின்விசிறிகளை மட்டுமே நம்பியிருக்கும் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்படும்.

வழமையாக பருகும் நீரின் அளவை விடவும், ஆகக்கூடுதலான அளவு நீரை பருகவேண்டும் என்றும், இயற்கையான பானங்களை அருந்தவேண்டும் என்றும் சுகாதார தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர். பழங்களைக் கொள்வனவு செய்து, இயற்கையான பானங்களை தயாரித்து அருந்த முயற்சிப்போர், பழங்களின் விலைகளைக் கேட்டே மயங்கிவிழுந்து விடுகின்றனர்.

இயற்கையின் மீது தனது முழுமையான ஆதிக்கத்தை செலுத்தும் மனிதர்களின் எண்ணிக்கை குறையவில்லை. இயற்கையின் மீது அன்பு செலுத்துவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கவேண்டும். இயற்கை சமநிலையை பேணவேண்டும். இல்லையேல் இயற்கையை சீண்டி பார்த்ததன் விளைவை, நாம் மட்டுமன்றி, எதிர்கால சந்ததியினரும் அனுபவித்தே ஆகவேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பிரச்சினைகள் எமக்கு எதிரி அல்ல! பிரச்சினைகள் வரும்போதுதான் என்ன தவறு செய்தோம், எவரால் இது உருவானது, கவனக்குறைவால் ஏற்பட்டதா போன்ற விடயங்களை ஆராய்ந்து, பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும். இந்த அனுபவம் எமக்கு நல்ல படிப்பினையாகவும் அமைந்துகொள்ளும்.

அநேகர் தாங்கள் செய்த தவறுகளை உணராமல், அடுத்தவர் மீது வீண்பழியைச் சுமத்திவிடுகின்றனர். ஒருவிடயத்தை ஆராயும்போதுதான் உண்மை வெளிப்படும்.

கஷ்டங்களையும் துன்பங்களையும் திரும்பத் திரும்பக் கிளறக்கூடாது. இவற்றை வெட்டி எறிந்தால், மனம் இலேசாகும்.

சில சமயம் உங்களுக்குப் பிறரால், உறவினர், நண்பர்கள் போன்றவர்களால் இடையூறுகள் ஏற்பட்டால் பேசித்தீர்த்திடுக! மனஇறுக்கத்தைத் தொடரக்கூடாது. மன்னித்தலே மாமருந்து.

மற்றவர்கள் கூறுவதை எல்லாம் மனதில் பூட்டாதீர்கள். அவை பொய்யாகவும் இருக்கலாம். பயனற்ற பேச்சை விலக்குவது நன்று!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# எல்லை மீள்நிர்ணய அறிக்கை மீது எழும் கேள்விகள்

மொஹமட் பாதுஷா

உள்ளூராட்சி சபைத் தேர்தல் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதாவது, தேர்தலை நடத்துவதற்கு சாதகமான நிலைமைகள் நாட்டில் இல்லை என்பது, முன்னமே நன்றாக தெரிந்திருந்த சூழ்நிலையிலும், தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு, பின்னர் காரணங்களைச் சொல்லி காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் குறைவடைந்து, நேரடியாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கான நிகழ்தகவுகள் அதிகரித்து வருகின்றது.

அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சிகளின் போக்குகளும், தேர்தல் காலத்தில் பிரசாரப்படுத்தும் நோக்கத்துக்காக இனவாதத்தை உருவேற்றுவதற்காகவும், பயங்கரவாதம் குறித்து பயங்காட்டுவதற்காகவும் அங்குமிங்குமாக எடுக்கப்படுகின்ற எத்தனங்கள், பெரிய தேர்தல் ஒன்றுக்கான அடித்தளங்கள் என்றே மக்கள் பேசிக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

இதுவெல்லாம் ஒருபுறமிருக்க, எல்லை மீள்நிர்ணயகுழு தனது அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றது. இந்தப் பின்னணியில். உள்ளூராட்சி தேர்தல் இனி நடைபெறுமாயின் அது புதிய எல்லைகளின் அடிப்படைலேயே இடம்பெறலாம் என்றும் சிலர் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளரான மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழு, பல மாதங்களாக முயற்சிகளை செய்து, பல பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்த பின்னர் தமது அறிக்கையை கையளித்துள்ளது.

இருப்பினும், ஏனைய எல்லா ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைப் போலவே, இந்த அறிக்கையும் பரந்துபட்ட விதத்திலான, நூறு சதவீதம் சரியான ஓர் அறிக்கையா என்பது பரிசீலனைக்குரியது.

இந்நிலையில், இந்த அறிக்கையில் பல குறைபாடுகள் உள்ளதாக எஸ். சிறிதரன் உள்ளிட்ட ஓரிரு தமிழ் எம்.பிக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். சமகாலத்தில், எல்லை மீள்நிர்ணயமானது முஸ்லிம்களுக்கு பாதகமாக அமைந்துள்ளதாக பல முஸ்லிம் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பல்வேறு காரணங்களுக்காக எல்லை மீள்நிர்ணயம் செய்யப்பட்டதை நாம் அறிவோம். குறிப்பாக, உள்ளூராட்சி சபைகளின் எல்லை முரண்பாடுகள், ஏற்கெனவே எல்லை நிர்ணயத்தில் காணப்படும் குறைபாடுகளை நீக்குவதும், சரியான எல்லைகளை மீள்வரையறை செய்வதும் வெளிப்படை நோக்கமாகும்.

மிக முக்கியமாக, உள்ளூராட்சி மன்றங்களினதும் அவற்றின் உறுப்பினர்களினதும் எண்ணிக்கையை 50 சதவீதத்தால் குறைக்கும் நோக்கத்துடனே எல்லை மீள்நிர்ணய குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டார். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையால் சுமார் 8,500 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை தொடர்ந்தும் கொண்டிருக்க முடியாது என்ற நிலையில், இந்த எண்ணிக்கையை 50 சதவீதத்தால் குறைக்க வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இதில் பல நியாயங்கள் உள்ளதை மறுப்பதற்கில்லை. அதுமட்டுமன்றி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உதவி வழங்கும் வெளித்தரப்பின் நிபந்தனைகளில் ஒன்றாக இதுவும் இருக்கலாம்!

அரசியல் தரப்புகளைப் பொறுத்தமட்டில், அவர்களுக்கு இதற்கப்பாலான பல உபகாரணங்களும் இருக்கலாம். குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழ்கின்ற இனக் குழுமத்தின் பிரதிநிதித்துவத்தை மாற்றியமைத்தல், மாகாண எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதற்கான ஓர் அடிப்படையை ஆரம்பித்து வைத்தல் போன்றன அவற்றுள் உள்ளடங்கலாம்.

எதுஎவ்வாறிருப்பினும், எல்லை நிர்ணய அறிக்கையின் அடிப்படையில் நோக்கினால், சிறுபான்மை சமூகத்தினர் பெரும் எண்ணிக்கையில் வாழ்ந்து வரும் வட்டாரங்கள், புதிய எல்லை நிர்ணயத்தின் மூலம் துண்டாடப்பட்டு, அந்த வட்டாரங்கள் பெரும்பான்மை சமூகத்தின் பிடிக்குள் கொண்டுவரப்பட்டு உள்ளதாக சொல்லப்படுகின்றது

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு தென்இலங்கையில் அதாவது வடக்கு, கிழக்குக்கு வெளியே இதன் பாதிப்பு அதிகமானதாக இருக்கும் என்ற அச்சத்தை முஸ்லிம் அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் வெளியிட்டுள்ளனர். ஏனைய சில இடங்களிலும் இந்நிலைமையை அவதானிக்க முடிவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார். “பொது மக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் ஆர்வமுள்ள சமூக அமைப்புகளின் ஆலோசனைகளும் கருத்துகளும் கோரப்பட்டன. கிடைக்கப் பெற்ற ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. அதன் அடிப்படையிலேயே அறிக்கை தயாரிக்கப்பட்டது” என்று அவர் கூறியுள்ளார்.

இருப்பினும், எல்லை நிர்ணய அறிக்கையால் நடைமுறையில் சிறுபான்மை இனக் குழுமங்களுக்கு சிறுசிறு பாதக நிலைகள் ஏற்படலாம் என்று அவர் கூறிய செய்தி ஒன்றையும் எங்கோ காண முடிந்தது.

எவ்வாறிருப்பினும், பல உள்ளூராட்சி சபைகளில் சிறுபான்மைச் சமூகத்தின் குறிப்பாக முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கப்படும் வகையில் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி, அதன் நடவடிக்கைகள் என்பவற்றைப் பார்க்கின்ற போது, அவசர அவசரமாக தமக்கு விரும்பிய விதத்தில் சில விடயங்கள் கையாளப்பட்டுள்ளதாக தோன்றுகின்றது.

மொத்தமாக, நாட்டில் உள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் நோக்கில் எல்லை மீள்நிர்ணயம் மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்ட போதிலும், அதிக பிரதேசங்களில் முஸ்லிம்களினதும் மற்றும் சில பகுதிகளில் தமிழர்களினதும் பிரதிநிதித்துவம் இலக்கு வைக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வி வலுவாக எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

எல்லை மீள்நிர்ணய குழுவின் அறிக்கை சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்தும் அல்லது குறைக்கும் வகையிலே அமைந்துள்ளது என, முஸ்லிம் கட்சித் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியூதீன், ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆகியோர் அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்தோடு, திட்டமிட்டபடி குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டாம் எனவும் அவர்கள் கோரியுள்ளதாக அறிய முடிகின்றது.

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் ஹசன் அலி இது பற்றி கருத்துக் கூறுகையில், “எமது நாட்டில் எந்தவோர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும் அதில் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்படுவது வழக்கமானது. அந்த வரிசையில் புதிய எல்லை நிர்ணயத்திலும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, ‘காலம் பிந்தியாவது சூரிய நமஸ்காரம்’ செய்வதற்கு சில முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்வந்துள்ள போதிலும், 90 சதவீதமான முஸ்லிம் எம்.பிக்களும் ஏனைய அரசியல்வாதிகளும் இன்னும் ஆழ்ந்த உறக்கத்திலேயே இருக்கின்றனர். இந்த அறிக்கையின் தார்ப்பரியம் குறித்து அவர்கள் அறிந்திருப்பார்களா என்பது கூட சந்தேகத்திற்குரியது.

புதிய எல்லை நிர்ணய அறிக்கையில் உள்ளடங்கியுள்ள சிபாரிசுகள் பொதுவாக, சிறுபான்மைச் சமூகத்தையும் குறிப்பாக முஸ்லிம்களையும் பாதிப்பதாக அமைந்துள்ளதாக கூறப்படுகின்ற நிலையில், இதற்கு இன்னுமொரு பக்கமும் இருக்கிறது.

எல்லை மீள்நிர்ணய குழு எதோ ஓர் அடிப்படையில் தமது பணியிலக்கை நிவர்த்தி செய்திருக்கின்றது. இதில் சரிகளும் தவறுகளும் இருக்கலாம். அத்துடன், இது இன்னும் சட்ட அந்தஸ்துப் பெறவும் இல்லை.

முஸ்லிம் பிரதிநிதித்துவங்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் மட்டும் அதிகமாக இருந்தால், முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் நிறைவேறி விடுமா என்பதையும், அந்தப் பிரதிநிதித்துவங்கள் காத்திரமானவையாக இருக்கவும் வேண்டும் என்பதையும் இவ்விடத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

அதேவேளை, எல்லை மீள்நிர்ணய விடயத்தில் இதுவரை முஸ்லிம் சமூகம் எந்தளவுக்கு அக்கறை காட்டியது என்பது முக்கியமாக விடைகாணப்பட வேண்டிய கேள்வியாகும். ஏனெனில், “பெரும்பாலான பிரதேசங்களிலிருந்து ஆலோசனைகள் கிடைக்கவில்லை” என மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளமை கவனிப்புக்கு உரியது.

எல்லை மீள்நிர்ணயம் ஒன்றும் இரகசியமாக மேற்கொள்ளப்படவில்லை. இரவோடிரவாக செய்யப்படவும் இல்லை. பகிரங்கமாக அறிவிக்கப்பட்டே முன்னெடுக்கப்பட்டது. இது விடயத்தில் விரல்விட்டு எண்ணக் கூடிய முஸ்லிம் அரசியல்வாதிகள் கவனமாக செயற்பட்டார்கள். குழுவின் முன்னிலையில் செயற்பாட்டாளர்கள் சிலர் தமது கருத்துகளை முன்வைத்தார்கள். ஆனால், மீதமுள்ள முஸ்லிம் சமூகம் என்ன செய்து கொண்டிருந்தது என்ற மீள்வாசிப்பு இங்கு முக்கியமானது.

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் எந்தளவுக்கு முக்கியமானவை என்பதை முஸ்லிம், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய செயற்பாட்டு அரசியல்வாதிகளும் உணர்ந்து, அதில் சிறுபான்மைச் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக முழுமூச்சுடன் செயற்பட்டிருக்க வேண்டும்.

சமூக சேவகர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும் புத்திஜீவிகளும் அமைப்புகளும் மட்டுமன்றி பள்ளிவாசல்கள் போன்ற அமையங்களும் இவ்விடயத்தில் விழிப்புடன் செயற்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தால் இதிலுள்ள வழுக்கள் இன்னும் குறைவாக இருந்திருக்கலாம்.

இப்போது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, அதாவது பஸ் புறப்படும் நேரத்தில் ஓடிவந்து, “அதில் தவறு உள்ளது” என்று கூறுவது, பக்குவமான அரசியலுக்கு உரிய பண்பில்லை என்பதை முஸ்லிம்களும் தமிழர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எது எப்படியிருப்பினும், இறுதி அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டு சட்ட அந்தஸ்துப் பெறுவதற்கு இடையில், இயலுமான சகல முயலுகைகளையும் மேற்கொண்டு எல்லை மீள்நிர்ணயத்தில் உள்ள குறைபாடுகளை களைய வேண்டும். சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன், எதிர்காலத்தில் உள்ளூராட்சி உறுப்பினர்களின் தரமும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எல்லை மீள்நிர்ணயத்தின் ஊடாக நடந்தேறியுள்ள வழுக்கள் சீர்செய்யப்பட்டு முஸ்லிம்கள், தமிழர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதற்காக பாடுபட வேண்டுமேயொழிய, சிங்கள மக்களின் பிரதிநிதித்துவத்தை குறிவைப்பது நமது நோக்கமாக இருக்க முடியாது. நல்லெண்ணம்தான் வெற்றி பெறும்.

## கடிதங்கள்

### அம்பாறை மாவட்ட தென்னைகளில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம்



அம்பாறை மாவட்டத்தில் ஒலுவில், நிந்தவூர், அட்டப்பள்ளம், பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில், தீகவாபி போன்ற பகுதிகளில் வெண்ணிற ஈ நோய்த் தாக்கம் காரணமாக தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டு உள்ளதாக தென்னம் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துப் பூச்சியிலும் சிறியதான வெள்ளை நிறமுடைய பூச்சிகள், தென்னை மரங்களின் ஓலைகளின் உட்புறத்தில் தொற்றியிருந்து கொண்டு, நோய் தாக்கத்தை அண்மைக்காலமாக ஏற்படுத்துகின்றன. இதனால் ஓலைகள் கறுப்பு நிறமடைந்து, அதனால் வருமானம் பாதிக்கப்பட்டு, படிப்படியாக தென்னை மரம் அழிந்து போகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நோய்த் தாக்கமானது, உயர்ந்த மரங்களில் மட்டுமல்லாது இளம் தென்னம் பிள்ளைகளிலும் ஏற்பட்டுள்ளது. பல்வேறு வகையான கிருமிநாசினிகள், மருந்துகள் தெளித்தும் இதுவரைக்கும் நோய்த் தாக்கம் குறையவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, விவசாய அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட தென்னை பயிர்ச் செய்கை அதிகாரிகள், இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி, வெண்ணிற ஈ நோயைக் கட்டுப்படுத்தி தருமாறு தென்னந் தோட்ட உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

எம்.எஸ்.எம் ஹனீபா

# “எங்க கதையை கொஞ்சம் கேளுங்கள்”

சு.நிஷாந்தன்

ஒவ்வொரு குடும்பங்களிலும் ஏதாவது ஒரு பிரச்சினை இருக்கத்தான் செய்கின்றது. அதனால், பிள்ளைகளின் எதிர்காலமே சூன்யமாகிவிடுகின்றது. அவர்கள் கூறும் கதைகளைக் கேட்டால், நாமெல்லாம் எங்கிருக்கின்றோம் என சிந்திக்க தோன்றுகின்றது. “எங்கள் வவுனிக்குள கிராமம் மிக அழகானது. தினமும் ஆசை ஆசையாய் கல்விகற்க பாடசாலைக்குச் செல்வேன். ஆங்கிலப்பாடம் எனக்கு மிகவும் விருப்பமான பாடம். வகுப்பாசிரியை உன் கனவு என்ன? என கேட்கும்போதெல்லாம் ஓர் ஆசிரியையாக வரவேண்டும் என்றே கூறுவேன். உண்மையில் அதுதான் என் கனவும் இலட்சியமும்கூட. ஆனால், தந்தையின் குடிப்பழக்கத்தாலும் குடும்பத்தின் வறுமையாலும் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு என் கனவுகள் கலைந்துவிட்டன. மீண்டும் பாடசாலைக்கு போவேனா என்ற பேராவலுடன் காத்திருக்கிறேன்” என்று பத்து வயது சிறுமியான மதியரசி அழுதுகொண்டே கூறினாள்.



## நாட்களை கடத்தும் மதியரசி

வவுனியா மாவட்டம், வட மாகாணத்தில் இரண்டாவது அதிக சனத்தொகையை கொண்ட மாவட்டமாகும். இலங்கை எதிர்கொண்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி இங்கு வாழும் நலிவடைந்த மக்களையும் பாதித்துள்ளது. இலங்கையில் கிராமப்புற மக்களே அதிகளவாக இந்த நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளனர். அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுகளால் சுயதொழில் நடவடிக்கைகள், விவசாய நடவடிக்கைள் மற்றும் எந்தவொரு தொழிலையும் முன்னெடுக்க முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வவுனிக்குளம் கிராமத்தில் குடும்பத் தலைவரின் மதுபாவனையால் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் சொந்த வீடு நிலத்தை விட்டு தனது ஐந்து பிள்ளைகளுடன் வெளியேறிய தாய்தான் வாசுகி. தான் உழைக்கும் அன்றாட பணத்தை தனது கணவனின் மதுபாவனைக்கு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ச்சியாக அவருக்கு ஏற்பட்டதால் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் அவர்களது கல்வியையும் கருத்திற்கொண்டு, தாண்டிக்குளத்தில் ஒரு வாடகை வீட்டில் குடியேறினார்.

“என் கணவனின் குடிப்பழக்கத்தால் கடந்த 23 வருடங்களாக நான் நிம்மதியில்லாத வாழ்க்கையையே வாழ்கிறேன். எனக்கு 2 ஆண் மற்றும் 3 பெண் பிள்ளைகள். கணவனைப் பார்த்து மூத்த மகனும், மூன்றாவது மகனும் மதுவுக்கு அடிமையாகி எங்களைவிட்டு பிரிந்து வாழ்கின்றனர். மூத்தவனுக்கு அடுத்தவள் என் மகள் தயாராணி. மகன்மார் மதுவுக்கு அடிமையானதால் 16 வயதுமிக்க மூத்தவனுக்கு அடுத்தவளான மகளை கொழும்புக்கு பணிக்கு அனுப்பினேன். நான்காவது எனது பெண் பிள்ளை மாத்திரமே கல்வி கற்கிறாள். குடும்பத்தின் பொருளாதார நெருக்கடியால் கடைசியாக பிறந்த மதியரசியின் ஆசிரியர் கனவையும் கலைத்துவிட்டேன்.” என தன் உள்ளக்குமுறலை வெளிப்படுத்தினார் வாசுகி.

வவுனியா மாவட்டத்தில் நலிவடைந்த குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி மற்றும் மதுவுக்கு அடிமையாகும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வாசுகியின் குடும்பத்தை போல எத்தனையோ குடும்பகளில் வாழும் பிள்ளைகளின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது. இவர்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் தங்களின் பிள்ளைகளின் கல்வி குறித்து சிந்திக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பிள்ளைகளின் கல்வி மற்றும் வாழ்வாதாரத்தை பெருக்கிக்கொள்ள அரச நிறுவனங்களின் உதவிகளையும், முறையான பொருளாதாரத் திட்டங்களையும் எதிர்பார்க்கின்றனர்.




## தொழிலுக்கு அமர்த்தப்படும் சிறுவர்கள்

வவுனியா வடக்கு, தெற்கு கல்வி வலயங்களுக்குட்பட்ட கிராமங்களில் பல சிறுவர்களின் கல்வி இடைநிறுத்தப்பட்டு பண்ணைகளிலும் நகர்ப்புற கடைகளிலும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்” என வவுனியா வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இராஜரத்தினம் கூறுகிறார்.

## கடை ஒன்றில் பணிபுரியும் தவசீலன்

வவுனியா வடக்குப் பகுதிக்கு உட்பட்ட கிராமப்புறங்களில் கடந்த இரண்டு வருடங்களில் மாத்திரம் 95 மாணவர்களும் தெற்கு பகுதியில் 298 பேரும் தமது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்தி தொழில்களுக்குச் சென்றுள்ளனர். மாணவர்களின் இடைவிலகல்கள் தொடர்ச்சியான அதிகரிப்பையே காட்டுவதால் செட்டிக்குளம் மற்றும் சிங்கள பிரதேசங்களில் மாணவர்களின் இடைவிலகல்கள் குறித்த கண்காணிப்பு ஆய்வுகளை நடத்த மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ் பகுதிகளைவிட சிங்கள கிராமங்களில் இடைவிலகல் அதிகமாக உள்ளதாக மடுகந்த பாடசாலையின் ஆசிரியர் ரஞ்சன் ரணில் ஹேமசிறி கூறுகிறார்.

## வளையல்களை விற்பனை செய்யும் அகிலேஸ்

“வட மாகாணத்தில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவதாக எவ்வித முறைப்பாடுகளும் பதிவாகுவதில்லை. ஆனால், நாம் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொள்ளும்போது செட்டிக்குளம், ஆரியகுளம், பட்டிக்குடியிருப்பு, பெரிய தம்பனை உட்பட பல கிராமங்களில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது” என வவுனியா மாவட்ட செயலகத்தின் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி நந்தசீலன் கூறுகிறார்.

வட மாகாணத்தில் குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவது குறித்து விரைவான ஆய்வுகளை துறைசார் அரச நிறுவனங்கள் நடத்த வேண்டுமென்பதுடன் பாடசாலை இடைவிலகல்கள் குறித்து கிராமபுற பாடசாலை நிர்வாகங்களும் பெற்றோரும் தீவிர அவதானம் செலுத்த வேண்டும் என்பதும் களஆய்வுகளில் தெளிவாகிறது.

நகர்ப்புற பாடசாலைகளில் மாணவர்களின் இடைவிலகல் மிகவும் அரிதென வவுனியா மத்திய தமிழ் மகா வித்தியாலய அதிபர் யோகேஸ்வரன் தெரிவிக்கிறார். ஆனால், கந்தபுரம் வாணி வித்தியாலயத்தில் ஒவ்வொரு வருடமும் 7 முதல் 8 மாணவர்கள் கல்வியை கைவிட்டுவிட்டு பணிக்குச் செல்கின்றனர் என ஆசிரியர் சற்சொரூபன் கூறுகிறார்.

வட மாகாணத்தில் சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்படுவது தொடர்பில் ஓரளவான விழிப்புணர்வு பெற்றோரிடையே உள்ள போதிலும் மத்திய மாகாணத்தில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. மத்திய மாகாணத்தில் குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஓரிரு ஆண்டுகளில் பொருளாதார நெருக்கடி உச்சம் தொட்டுள்ளதால் கொழும்பு உட்பட நாட்டின் பிற பாகங்களில் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவது கணிமான அளவு அதிகரித்துள்ளது.

## தாக்கம் செலுத்தும் குடும்ப வறுமை

“2019ஆம் ஆண்டின் பின்னர் நாடு முகங்கொடுத்துவரும் பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாத நிலைக்கு அனைத்து மக்களும் தள்ளப்பட்டுள்ளனர். ஏற்கனவே வருமானம் குறைவாக உள்ள தொழிலாளர்களுக்கு இதன் தாக்கம் கடும் சுமையாக மாறியுள்ளது. அதனால் மூன்று, நான்கு பிள்ளைகள் உள்ள குடும்பங்கள் ஒருவர் அல்லது இரு பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி அவர்களை தொழிலுக்கு அமர்த்துகின்றன”- என நுவரெலியா மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஹரேந்திரன் குறிப்பிட்டார்.

இலங்கை எதிர்கொண்டுவரும் மோசமான பொருளாதார சூழலால் நலிவடைந்த குடும்பங்களில் வைத்தியர்களாகவும், ஆசிரியர்களாகவும் சமூகத்தில் மதிப்புமிக்க ஒரு தொழிலை செய்ய வேண்டுமென்ற கனவுடன் வாழ்ந்த பலரின் எதிர்பார்ப்புகள் கலைந்து வருகின்றன.



“சிறுவயது முதலே பொலிஸ் அதிகாரியாகி எங்கள் ஊரில் பணியாற்ற வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. சாதாரண தரத்தில் ஆங்கிலப்பாடத்தை தவிர ஏனைய அனைத்து பாடங்களிலும் சிறந்த பெறுபேறுகளை பெற்றேன். ஆனால், குடும்பத்தின் வறுமைநிலை மோசமடைந்ததால் ஹட்டனில் ஒரு வெற்றிலை விற்பனை செய்யும் கடையில் இன்றுநான் தொழில்புரியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன்” என கலைக்கமல் உருக்கத்துடன் தனது கதையைக் கூறினார்.

## கனவுகள் கலைந்த ஏக்கத்துடன் கலைக்கமல்

கொட்டகலை ட்ரைடன் தோட்டத்தில் இரண்டு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் பிறந்த கலைக்கமல், தந்தையின் மதுப்பழக்கத்தாலும் தாயை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தாலும் தனது கனவுகளை தூக்கியெறிந்துவிட்டு கடையில் பணிபுரிகிறார்.

இலங்கை பாரதூரமான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள போதிலும் மதுபாவனை சதவீதம் குறையவில்லை. மாறாக அதிகரிப்பையே காட்டுவதாக உலக நாடுகளில் மதுபாவனைகள் குறித்து ஆய்வுகளை நடத்தும் statista.com இணையத்தின் தரவுகள் கூறுகின்றன. 2021ஆம் ஆண்டுமுதல் இலங்கையில் மதுபாவனை சதவீதம் தொடர்ச்சியான அதிகரிப்பு போக்கையே காட்டுகின்றன. இலங்கையில் இரண்டாவதாக அதிக மதுபாவனையாளர்கள் மத்திய மாகாணத்திலேயே உள்ளனர். இங்கு 660 மதுபானசாலைகள் உள்ளன. நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் 234 மதுபானசாலைகள் உள்ளதுடன் இவை தோட்டங்களை அண்டிய சிறிய நகரங்களிலேயே அமைந்துள்ளன.

குடும்பத் தலைவர்களின் மதுபாவனையால்தான் பெருந்தோட்டப்பகுதிகளில் பல மாணவர்கள் கல்வியை கைவிட்டு ஆடை கடைகளிலும், ஹோட்டல்களிலும், கட்டட நிர்மாண பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

## கலையும் கனவுகள்

“எங்கள் ஊரில் பல அண்ணாமார்களும் அக்காமார்களும் ஆசிரியர்களாக பணி புரிகின்றனர். அவர்களை போன்று நானும் ஆசிரியராக வேண்டுமென ஆசைப்பட்டேன். ஆனால், தாய் தலைமையிலான என் குடும்பத்தின் வறுமையை போக்க அன்றாட கூலிக்காக 16 வயதிலேயே மரக்கறி தோட்டத்தில் பணிக்கு வந்துவிட்டேன்” என மஸ்கெலியா ஸ்டொக்ஹோம் தோட்டத்தை சேர்ந்த காயத்திரியை சந்தித்தபோது கவலையுடன் தெரிவித்தார்.



## காய்கறிகளுடன் காயத்திரி

கடந்த 2020ஆம் ஆண்டுக்குப்பின்னர் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவது கணிசமான அளவில் அதிகரித்துள்ளதாக கண்டி சமூக அபிவிருத்தி நிலையம் நடத்திய ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கணிசமாக இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. மத்திய மாகாணத்தின் ஹட்டன் கல்வி வலயத்தில் மாத்திரம் கடந்த 2021ஆம் ஆண்டு 790 மாணவர்கள் இடைவிலகி தொழில்களுக்குச் சென்றுள்ளனர். இது 2022ஆம் ஆண்டில் மேலும் அதிகமாக இருந்திருக்குமென ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட டின்சினன் பாடசாலை அதிபர் பொன் பிரபா கூறியதுடன் தமது பாடசாலையில் கடந்த (2022) ஆண்டு 20 சதவீதமான மாணவர்கள் கல்வியை கைவிட்டு தொழில்களுக்கு சென்றுள்ளனர் என தெரிவித்தார்.

டிக்கோயா நுண்கலை கல்லூரியில் கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம்வரையான காலப்பகுதியில் 39 பேர் குடும்ப வறுமை காரணமாக கல்வியை இடைநிறுத்திவிட்டு கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளுக்கு தொழிலுக்குச் சென்றுள்ளனர் என அதிபர் என்.மூவேந்தன் தெரிவித்தார்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலையில் 27 மாணவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் நகர்புற கடைகளில் பணிக்குச் சென்றுள்ளதாக பாடசாலை ஆசிரியர் கேதீஸ்வரன் கூறியதுடன், ஹட்டன் கார்பெக்ஸ் கல்லூரியில் 2021, 2022ஆம் ஆண்டுகளில் 20 மாணவர்கள்வரை பாடசாலையிலிருந்து இடைவிலகி தொழிலுக்குச் சென்றுள்ளதாக அதிபர் பரசுராமன் சங்கர் தெரிவித்தார்.



இளம் வயது திருமணங்கள், குடும்பத்தலைவர்களின் போதைப் பாவனை மற்றும் கொரோனா காரணமாக பாடசாலைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டிருந்தமை, பாடசாலைகளை அண்டி உருவாகியுள்ள போதைப்பொருள் வலைப்பின்னல், அதிகரித்துள்ள பொருளாதார சுமைகள் உள்ளிட்ட காரணங்களால் சாதாரண தரக் கல்வியைகூட கற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு இலங்கையில் வறுமையான மற்றும் நலிவடைந்த குடும்பங்களில் வாழும் சிறுவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.



## விளையாட்டு பொருட்கள் ரிம்ஷான்

“எமது தோட்டத்தில் அண்மையில் நடத்திய ஆய்வில், தாய்மார்கள் வெளிநாடு செல்லும் நிலைமை அதிகரித்துள்ளதால் பிள்ளைகள் கவனிப்பாரற்று சிறுவயதிலேயே தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர். இதனால் பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்” என ஹட்டன் செல்வகந்தை தோட்டத்தில் இயங்கும் உள்ளூர் அபிவிருத்திக்கான பாராளுமன்றத்தின் உறுப்பினர் சங்கரன் தெரிவிக்கிறார்.

நுவரெலியா மாவட்டத்தை பொறுத்தமட்டில் குடும்பத் தலைவர்களின் மதுபாவனை, தாய்மார்கள் பிள்ளைகளைப் பிரிந்து வெளிநாடு செல்வது, அதிகரித்துள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி போன்ற காரணிகளாலேயே அதிகமாக சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுகின்றனர் அறியமுடிகிறது. நுவரெலியா மாவட்டத்தை ஒத்ததான காரணிகளே பதுளை மாவட்டத்திலும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதில் தாக்கம் செலுத்துகின்றன.

## பாடசாலை இடைவிலகல்கள்

“குடும்ப வறுமை காரணமாக எனது சகோதரர் 9ஆம் தரத்திலேயே கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழிலுக்குச் சென்றார். அவர் பணிப்புரிந்த இடத்தில் அவரைவிட மூத்த நபர்களுடன் ஏற்பட்ட நட்பால் ஹெரோயின் உட்பட பல்வேறு போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானார். தந்தை இல்லாத எங்கள் குடும்பத்துக்கும் எனது கல்வி நடவடிக்கைகளுக்கும் கைகொடுப்பார் என எதிர்பார்த்திருந்த எங்களை அவர் ஏமாற்றிவிட்டார். வயதுபோன என் தாயை காப்பாற்ற சாதாரண தரத்துடன் எனது கல்வியை நிறுத்திவிட்டு தோட்டத் தொழிலுக்குச் செல்கிறேன்”-என அப்புத்தளை தங்கமலை கிராமத்தில் வசிக்கும் 17 வயதுடைய சர்மிளா கவலையுடன் கூறினார்.

## கொழுந்து பறிக்கும் சர்மிளா

பண்டாரவளை, பதுளை, பசறை உள்ளிட்ட நகரங்களில் பல கடைகளிலும், ஹோட்டல்களிலும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுள்ளனர். அதேபோன்று சர்மிளாவை போன்று பெருந்தோட்டப்பகுதிகளிலும் 18 வயதுக்கு குறைவான சிறுவர்கள் குடும்ப வறுமையால் தொழிலுக்குச் செல்வதாக இவர்களுடன் நடத்திய கலந்துரையாடல்களில் கூறுவதுடன் பெரும்பாலானவர்கள் 9,10ஆம் தரங்கள் மற்றும் சாதாரண தரத்துடன் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.

பெருந்தோட்டப்பகுதியை மையப்படுத்தி ஆய்வுகளை நடத்தும் மனித அபிவிருத்தி தாபனத்தின் தரவுகளின் படி 242,000இற்கும் அதிகமான குடும்பங்கள் தோட்டப்புறங்களில் வசிக்கின்றன. இதில் 57.8 சதவீதமான மக்கள் இன்னமும் லயன் அறைகளில் வசிக்கின்றனர்.

“லயன் அறைகளில் வசிக்கும் குடும்பகளில் உள்ள மாணவர்கள் கல்வி கற்பதில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். பாடசாலை இடைவிலகல்களும் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதும் லயன் குடியிருப்புகளில்தான் அதிகமாக உள்ளது” என மனித அபிவிருத்தி தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரி யோகேஸ்வரி கூறுகிறார்.

“நாட்டில் சிங்களப் பாடசாலைகளில் இடைவிலகல் என்பது மிகவும் குறைவாகும். வெலிமடை கல்வி வலயத்தில் எந்தவொரு சிங்கள மாணவரும் பொருளாதார நெருக்கடியால் கல்வியை இடைநிறுத்திவிட்டு தொழிலுக்குச் செல்லவில்லை” - என வெலிமடை வலயக்கல்வி பணிமனையின் கள ஆய்வாளர் மெனிகே ரத்னாயக்க கூறுகிறார். பதுளை மாவட்டத்தில் முஸ்லிம் மாணவர்களின் இடைவிலகல்கள் என்பதும் மிக குறைவென வெலிமடை திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் ஜபார்டீன் மொஹட் முர்சீத் தெரிவித்தார்.

பதுளை மாவட்டத்தில் கள ஆய்வுகள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோருடன் நடத்திய அனைத்து சந்திப்புகளிலும் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை மற்றும் பொருளாதார சுமையால் தாய், தந்தை வெளிநாடு செல்கின்றமையே சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதில் பிரதான காரணிகளாக அடையாளம் காண முடிந்ததுடன், களுத்துறை மாவட்டத்தில் இந்தக் காரணிகளுடன் மேலும் பல பிரச்சினைகளால் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

மேல்மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளை எல்லையாகக் கொண்ட மாவட்டம்தான் களுத்துறை மாவட்டம். ஏனைய மாவட்டங்களை போன்று பொருளாதார நெருக்கடிகளால் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படும் நிலைமைகள் இங்கும் அதிகமாக உள்ளது.

“களுத்துறை மத்துகம பகுதியில் நான் வசிக்கிறேன். தற்போது பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்யும் கடையில் பணிப்புரிந்து வருகிறேன். உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியை பயில்வது எனது கனவாக இருந்து. கொழும்பில் சென்றே மேலதிக கல்வியை தொடர வேண்டியுள்ளது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் என்னால் விரும்பிய கல்வியை தொடர முடியாது போயுள்ளது” என மத்துமக பகுதியில் வசிக்கும் மொஹமட் இலியாஸ் கூறுகிறார்.

## மதுகமவில் பிளாஸ்டிக் கடையில் இலியாஸ்

களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை, தொடங்கொட, பேருவளை, பாணந்துரை ஆகிய நான்கு கல்வி வலயங்கள் உள்ளன. இங்குள்ள சிங்களப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தின் பின் தாம் விரும்பிய பாடங்களை கற்பதற்கான வாய்ப்புகள் மாணவர்களுக்கு உள்ளன. ஆனால், தமிழ்பேசும் மாணவர்களுக்கு கலைப்பிரிவு, வணிகப் பிரிவை தவிர ஏனைய தெரிவுகளை மேற்கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவாகும். பொருளாதார ரீதியாக ஓரளவு வசதி வாய்ப்புகள் உள்ள மாணவர்களால் மாத்திரமே கொழும்பில் உயர் கல்வியை கற்க முடிகிறது. இலியாஸை போன்று ஏனைய மாணவர்கள் பொருளாதார நெருக்கடியால் ஆசைப்பட்ட கல்வியை கற்க முடியாது மன உளைச்சலுடன் தொழிலுக்குச் சென்றுவிடுகின்றனர்.

“களுத்துறை மாவட்டத்தில் சிங்கள மாணவர்களுக்கு உள்ள சந்தர்ப்பத்தை போன்று தமிழ்மொழி மூலமான பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பிரிவுகளை ஆரம்பிக்கும் முயற்சிகளை கடந்த பல வருடங்களாக மேற்கொண்டு வருகிறோம்” என மத்துகமவை சேர்ந்த சமூக சேவையாளர் செல்வம் ஆரோக்கியம் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

## சமூக சேவையாளர் செல்வம் ஆரோக்கியம்


களுத்துறை கொழும்புக்கு மிகவும் அண்மித்த மாவட்டம் என்பதாலும் தமிழ்மொழி மூலமான கல்விக்கு போதிய வாய்ப்புகள் இல்லாமையாலும் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. களுத்துறை மாவட்டத்தில் சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளில் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படுவதும் பாடசாலைகளில் இருந்து இடைவிலகி செல்வதும் மிக குறைவாகும். ஆனால், தமிழ் பாடசாலைகளில் இந்த நிலைமை உள்ளது” என களுத்துறை கல்வி வலயத்தின் பிரதி பணிப்பாளர் பிரேமா விஜேசந்திர கூறுகிறார்.

பிரேமா விஜேசந்திரவின் தரவுகள் சரியாக இருந்தாலும் மிகவும் நலிவடைந்த சிங்கள குடும்பங்களும் பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்தவர்தான் இங்கிரியவை சேர்ந்த சந்தருவான்.

“நான் இங்கிரியவில் உள்ள பிரபல பாடசாலையில் 8ஆம் தரம் வரைதான் கல்விகற்றேன். தந்தைதான் என்னை பார்த்துக்கொள்வார். அவர் மாதத்திற்கு ஒருமுறை நன்றாக மது அருந்துவிட்டு வீட்டுக்கு வருவார். கையில் இருக்கும் பணத்தை என் அம்மம்மாவிடம் வழங்கவிட்டு செல்வார். எனக்கு கல்வியை வழங்க எவரும் அக்கறை காட்டாததால் சிறுவயதிலேயே தொழிலுக்கு வந்துவிட்டேன்;” என சந்தருவான் கவலையை வெளிப்படுத்தினார்.

## வீதியோர ஆடை விற்பனையில் சந்தருவான்

சந்தருவானின் கதை சோகமானதாக இருந்தாலும் களுத்துறை மாவட்டத்திற்கே முன்னுதாரணமாக திகழும் ஒரு பாடசாலையும் இங்கு உள்ளது. சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை கைவிட்டுவிட்டு பல்வேறு தொழில்களில் அமர்த்தப்படும் நிலைமை அதிகரித்துவரும் சூழலில் களுத்துறை பயாகல தமிழ் வித்தியாலயத்தில் எந்தவொரு மாணவரும் இடைவிலகி தொழிலுக்குச் செல்லாத வண்ணம் பெற்றோருக்கு வழிநடத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாக பாயாகல தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் ஆனந்தகுமார் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.



பாயாகல தமிழ் வித்தியாலயம் நாட்டில் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக இருக்கின்ற அதேவேளை, இலங்கையில் அதிகரித்துவரும் பொருளாதார நெருக்கடிகள், தாய், தந்தை வெளிநாடுகளுக்குச் செல்வது, போதைப்பொருள் பாவனை, சிறுவயது திருமணங்கள், பாடசாலைகளில் மாணவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகும் வகையில் விதிக்கப்படும் கடுமையான தண்டனைகள், கல்வியின் அவசியம் தொடர்பில் சிறுவர்களுக்கு பெற்றோரும் பாடசாலை நிர்வாகங்களும் அவர்கள் உணர்ந்துகொள்ளும் விதத்தில் வழங்காமை உள்ளிட்ட முக்கிய காரணிகளினால் சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப்படும் நிலைமை இலங்கையில் அதிகரித்து வருகிறது.

## பாதையோர தட்டுக்கடையில் செல்வக்குமார்

இந்தப் போக்கை தடுத்துநிறுத்த மாணவர்களுக்கு வழங்கும் இலவசக் கல்வியை வினைத்திறன் மிக்கதாக மாற்றியமைத்து கல்விச் சுமையை குறைக்க வேண்டும் என்பதுடன் பெற்றோருக்கும் சிறுவர்களுக்கும் சிறுவயதில் தொழிலுக்கு செல்வதால் ஏற்படும் விபரீதங்கள் குறித்து உரிய விழிப்புணர்வை சிறுவர் பாதுகாப்புத் தொடர்பிலான அரச நிறுவனங்கள், மாவட்ட சிறுவர் பாதுகாப்பு பிரிவுகள், வலயக்கல்வி பணிமனைகள், பாடசாலை நிர்வாகங்கள் ஊடாக வழங்க வேண்டும்.

தொழிலுக்கு அமர்த்தப்படும் சிறுவர்களை கண்டறியும் பணியகமொன்று உருவாக்க வேண்டுமென்துடன் 1929 என்ற அரச சிறுவர் பாதுகாப்பு தொடர்பான இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை பெற்று நிலைமையை தடுத்து நிறுத்த வேண்டுமென பல ஆசிரியர்களதும்; தொண்டு நிறுவனங்களினதும் கருத்தாக உள்ளது. சிறுவர் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக விசேட வேலைத்திட்டமொன்று இதற்கென விரைவாக உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம் சிறுவர்கள் இளம் வயதில் தொழிலுக்கு அமர்த்தப்படுவதை ஓரளவேனும் தடுத்துநிறுத்த முடியுமென்பது கள ஆய்வுகளின் முடிவாகும்.

(நேர்காணல் வழங்கிய சிறுவர்களின் பெயர்கள் கட்டுரையில் மாற்றப்பட்டுள்ளன.)

மிருசுவில் வடக்கில் வெளிவந்த செப்புத் திருமேனிகள்

# கண்டவையும் காணாமல் போனவையும்



பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம்
தலைவர், யாழ்ப்பாண மரபுரிமை மையம்

மிருசுவில் வடக்கு, மன்னன் குறிச்சியிலுள்ள ஒரு வீட்டு வளவில் கண்டுபிடிக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் பற்றி மாறுபட்ட தகவல்களும் பல ஊகங்களும் வெளிவந்த வண்ணமுள்ளன.

இந்நிலையில், அப்பிரதேசத்தைச் சேர்ந்த எனது மாணவனும் தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தருமான கமலநாதன் கயிலைவாசன் எடுத்த முயற்சியின் பலனால், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்துக்குச் சென்று, சில ஆய்வுகளையும் தகவல்களையும் பெறமுடிந்தது.

நாம் சென்று பார்த்த போது, அங்கு கிடைத்த திருமேனிகளுக்கு பட்டுத்துணிகள் சாத்தப்பட்டு, அதற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட சிறிய ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்தன. அதனால் அவற்றை முழுமையாகப் பார்த்து படமெடுக்க அனுமதி தரப்படவில்லை.

ஆயினும், கயிலைவாசன் எடுத்த முயற்சியால், இச்சிலைகள் பற்றிய தெளிவான படங்களையும், அவற்றின் அளவுகள் பற்றிய தரவுகளையும் பெறமுடிந்தது.

ஐம்பொன்னில் அமைந்த இந்தச் செப்புத் திருமேனிகளில் பிள்ளையார், சிவலிங்கம், வராகி அம்மன், பார்வதி பரமேஸ்வரன், மயிலுடன் இணைந்த ஆறுமுக சுவாமி, ஆறுமுக சுவாமி பீடம், ஐந்து தலை நாகங்கள், ஒரு தலைநாகம் என்பன முக்கியமாகக் காணப்படுகின்றன. அத்துடன் இவை அழகிய கலை நயத்துடனும் தோற்றமளிக்கின்றன. இத்திருமேனிகள் சராசரியாக 32 சென்ரிமீற்றர் தொடக்கம் 16 சென்ரிமீற்றர் உயரம் கொண்டவையாகும்.

நாம் சென்ற நேரத்தில், இத்திருமேனிகளைப் பார்வையிட பல இடங்களில் இருந்தும் மக்கள் அவ்விடத்துக்கு வந்துகொண்டிருந்தனர். அவர்களை அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு அன்னதானம் வழங்க வீட்டு உரிமையாளர்கள் தடபுடலான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர்.

இவ்விடத்தைப் பார்வையிட வந்த அவ்வூர் மக்கள், இத்திருமேனிகள் காணப்பட்ட இடத்தில், பல ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தென்னை மரத்தின் பாளை, பிள்ளையார் வடிவில் இருந்ததாகவும் பின்னர் அம்மரம் பட்டுப் போனதாகவும் கூறினர். அவ்வடிவத்தைத் தானும் சிறுவயதில் பார்த்ததாக என்னுடன் வந்த கயிலைவாசனும் கூறினார்.

வீட்டு உரிமையாளர், தான் கனவு கண்டே வீட்டுவாசலுக்கு முன்னால் இரண்டடி ஆழத்தில் நிலத்தை தோண்டிய போது, இச்சிலைகளைக் கண்டதாகக் கூறுகின்றார். ஆனால், இச்சிலைகள் எடுக்கப்பட்ட இடத்தை ஆய்வு செய்த போது, அவ்விடத்தில் ஆலய அழிபாடுகளோ, பிற பொருட்களோ இருந்ததற்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை.

பொதுவாக, அசாதாரண காலகட்டங்களில் பாதுகாப்புக் கருதி, தெய்வச் சிலைகளை நிலத்தில் புதைப்பது அல்லது, நீர்நிலைகளில் போடுவது வழக்கமாகும். அந்தநோக்கில், குடியிருப்பாளரிடம் வினவிய போது, தாம் இவ்விடத்தில் குடியேறிய பின்னர், இன்னோர் ஊருக்கு இடம்பெயரவில்லை எனக் கூறுகின்றார்.

எனவே, அதற்கு முன்னரே இச்சிலைகள் இங்கு புதைக்கப்பட்டு இருக்கலாம் எனக் கருத இடமிருப்பினும் இச்சிலைகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தைச் சுற்றி குடியிருப்புகளை அமைக்கவும், மரங்களை நாட்டவும் மண் தோண்டப்பட்டிருக்கும் சூழலில், இச்சிலைகளைக் கண்டுபிடிக்க அதிக வாய்ப்பு இருந்துள்ளது.

இந்நிலையில், இச்சிலைகளின் கலை மரபை நோக்கும்போது, இவற்றின் காலம் அதிகம் பழைமையானதாகவும் கருதஇடமில்லை. இந்நிலையில், திருமேனிகளுக்கு உரிய புகைப்படங்களை, பேராசிரியர் பொ. இரகுபதிக்கு அனுப்பி அவரிடம் கருத்துக் கேட்டபோது, யாழ்ப்பாணத்தில் வழக்கமாக பயன்பாட்டிலிருந்த சாமிப்பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த சிலைகளாகவே இவை இருந்திருக்கலாம் எனக் கூறியிருந்தார்.

பொதுவாக, மூன்றாம் தீட்சை பெற்ற ஒருவர், தனது சாமிப்பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் தெய்வச் சிலைகளை வெளியே எடுத்து, பூசை செய்ததன் பின்னரே உணவருந்தும் வழக்கம் உண்டு. இவ்வழக்கம் வரணிச் சைவக்குருக்களிடம் அதிகமாகக் காணப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் முக்கிய ஆலயத் திருவிழாக்களில், தீட்சை பெற்ற பலர் சாமிப் பெட்டிகளுடன் வந்து, பூசைகளில் கலந்து கொள்ளும் மரபு காணப்படுகின்றது. தற்போதும், மன்னன் குறிச்சி ஆலயத்திலும் இவ்வாறான சாமிப்பெட்டி இருந்ததாகவும், இருப்பதாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.


இவ்வாறான சாமிப் பெட்டிகள், பிற்காலத்தில் தொலைந்து போன சம்பவங்களும் உண்டு. மிருசுவிலில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட சிலைகளை, ஒரு சிலர் தகரப்பெட்டியுடன் கிடைத்ததாகவும், வேறு சிலர் மரப்பெட்டியுடன் கிடைத்ததாகவும் கூறுகின்றனர். ஆனால், வீட்டு உரிமையாளர், இவை குழிக்குள் தனித்தனியாகவே இருந்ததாகக் கூறுகின்றார்.

ஆனால், இச்சிறு குழியைச் சற்று அகலமாக அகழ்ந்து பார்த்தால், இச்சிலைகள் வைக்கப்பட்ட பெட்டி கிடைக்கலாம். அவ்வாறு கிடைத்தால் அச்சாமிப் பெட்டியின் உரிமையாளர் பெயரை அடையாளம் காணலாம். அப்பெயரின் எழுத்தை வைத்து சிலைகளின் காலத்தைக் கணிக்க முடியும்.


























# வன்முறைகள் பரிசளித்த வாழ்க்கை

சண்முகம் தவசீலன்

“நான்கு வருடங்களுக்கு மேலாக, என்னுடைய மகனுடைய மரணச் சான்றிதழை கூட பெற முடியாத நிலையில், நானும் எனது குடும்பமும் அநாதரவான நிலையில் வாழ்கின்றோம். வாழ்க்கையே முடிந்து விட்டது; இனி வாழ எதுவுமில்லை. சொத்தும் சுகமும் அழிந்து விட்டன. மனைவிக்கும் இரண்டு காதும் கேட்பதில்லை. அதுக்குரிய கூலியை இறைவன் தான் குடுக்கணும். இதுக்குப் பிறகும் இப்படியான சம்பவங்கள் ஒருபோதும் நடக்கக் கூடாது” என்கிறார் றகீம் சம்சுதீன்.

கண்டி, திகன பகுதியில் 2018 மார்ச் ஏழாம் திகதி இடம்பெற்ற திகன கலவரத்தில், தனது மகனான சம்சுதீன் அப்துல் வாசித் என்பவரை இழந்த தந்தையே றகீம் சம்சுதீன். சம்சுதீனின் மகன் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டு, நான்கு வருடங்கள் உருண்டோடிவிட்டன.



றகீம் சம்சுதீன்

நாடளாவிய ரீதியில் இடம்பெற்றிருந்த பல வன்முறைச் சம்பவங்கள், பொருட் சேதம், உயிரிழப்பு என எண்ணிலடங்காதா பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தன. இவை மத ரீதியான காரணங்களாலும், இன ரீதியான முரண்பாடுகளாலும், திட்டமிடப்பட்ட அரசியல் காரணங்களாலும் இடம்பெற்றன.

1956, 1958, 1977, 1981 (யாழ் நூலகம் எரிப்பு) 1983, 1997 (களுத்துறை) என இடம்பெற்ற கலவரங்களைத் தொடந்து, 30 ஆண்டுகால யுத்தம் என நீண்ட வன்முறைகள் வரிசையில், 2009 ஆம் ஆண்டு நிறைவடைந்த உள்நாட்டு யுத்தத்துக்கு பின்னரும் அளுத்கம, அம்பாறை, குருநாகல், திகன சம்பவங்கள், உயிர்த்தஞாயிறு குண்டுத் தாக்குதல், அரகலய என நீண்டு செல்லும் மனித மோதல்களால் ஏற்பட்ட பாதிப்புகள் ஏராளம்.

இவ்வாறான கலவரங்கள், மோதல்கள், குண்டுவெடிப்புகளால் நேரடியாக பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள், இன்றுவரை துயரங்களில் இருந்து மீளமுடியாத நிலையில் வாழ்ந்து வருவதுடன், அவர்களது குடும்பங்களும் உரிய நெறிப்படுத்தல்கள், தலைமைத்துவம் இன்றி பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றன.



கணவனை இழந்த ஒரு குடும்பத்தின் சமயலறை

இவ்வாறான பாதிப்புகளின் விளைவால், பெண் தலைமைக் குடும்பங்களாக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில், மாற்றம் என்பது விடை தெரியாத கேள்வியாகவே உள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 30 ஆண்டு கால யுத்தத்தின் காரணமாக அதிகளவான தமிழ், முஸ்லிம் பெண் தலைமைக் குடும்பங்கள் உருவாகியுள்ளன. அதேபோன்று யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருடைய குடும்பங்களும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக்கப்பட்டுள்ளன. ஒருசேர நோக்கின், நாடு முழுவதும் யுத்தத்தால், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் ஏராளமுள்ளன.

யுத்தத்தின்போது கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களால் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தை உள்ளடக்கிய பல பெண்களும் பெண் தலைமைக் குடும்பங்களாக்கப்பட்டுள்ளனர்.

யுத்தத்தின் தாக்கத்தால் கணவன்மார்களை இழந்து பெண் தலைமைத்துவக் குடும்பங்களாக்கப்பட்டவர்களில் வடக்கு, கிழக்கில் வேறு நிலையும், தெற்கில் வேறு நிலையும்தான் காணப்படுகிறது. ஒப்பீட்டளவில் உயிரிழந்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட வேறு சலுகைகளும் வழங்கப்பட்டுவரும் நிலையில், வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எந்த நிதி உதவிகளும் அரசாங்கத்தால் வழங்கப்படுவதில்லை. இதுவே இப்போதுவரை நாட்டில் ஒரே பாதிப்புகளை எதிர்கொண்டிருந்தவர்கள் வெவ்வேறு விளைவுகளை அனுபவிப்பதை எடுத்துக்காட்டுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தை பொறுத்தளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 2,120 குடும்பங்களும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் 2,110 குடும்பங்களும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 1,351 குடும்பங்களும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் 820 குடும்பங்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் 447 குடும்பங்களும் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் 596 குடும்பங்களுமாக 7,744 பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களில் சிலாவத்தை கிராமத்தை சேர்ந்த செல்வமலரும் ஒருவராவார்.



தையல் தொழிலில் ஈடுபடும் செல்வமலர்

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து கணவன் உயிரிழந்துள்ள நிலையில், தனது குடும்பத்தை கொண்டு நடத்துவதற்காக தனது மகளுடன் தையல் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளார் செல்வமலர்.

“தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இந்தத் தையல் தொழில், எமது குடும்பத்துக்கான தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. ஓ.எல் படிக்கும் மகளின் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய பெரும் சிரமங்களை எதிர்கொள்கிறேன். வெளியிடங்களுக்கு வேலைக்கு சென்றால் சமூகத்துக்குப் பொருத்தமில்லாத பெயர்களை வைத்துவிடுவார்கள் என்றே வெளியில் வேலைக்குச் செல்வதில்லை. நல்ல நிகழ்வுகளில் கூடப்பங்கேற்பதில்லை” என்கிறார் செல்வமலர்.

கணவனை இழந்த பெண்கள் பொருளாதார ரீதியாக ஒருபுறம் இன்னல்களை எதிர்கொண்டாலும், மறுபுறம் சமூகக் கட்டமைப்புகளால் பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றனர். தமது பிள்ளைகளை வளர்ப்பதற்கே சிரமங்களை எதிர்கொள்ளும் அவர்கள், மாற்றுவழிக்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிலும் ஓய்வூதியமோ, ஏனைய சலுகைகளோ இன்றி, அரசினால் பொதுவாக வழங்கப்படும் சிறு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காகக்கூட, சிலவேளைகளில் அரச அதிகாரிகளின் பாலியல் இச்சைகளுக்குப் பலியாகவேண்டிய நிர்ப்பந்தமும் அவர்களை வாட்டிவதைக்கிறது.



சட்டத்தரணி வி.எஸ்.எஸ் தனஞ்சயன்

பல்வேறு காரணங்களால் பெண் தலைமை தாங்கும் குடும்பங்களாக ஆக்கப்பட்ட பெண்களுக்கு சட்டமும் துன்பத்தையே பரிசளிக்கிறது. “தேசவழமைச் சட்டத்தின் கீழ், பெண்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக, இந்தச் சட்டத்தின் கீழ், சொத்துகளை பெண்கள் விற்பனை செய்வது, கொள்வனவு செய்வதென்பது சிரமமாக காணப்படுகின்றது. அதேநேரம், பெண்கள் கடன்களை பெறும்போதுகூட, கணவனின் கையொப்பத்தின் தேவைப்பாடும் உள்ளது. இவ்வாறான நிலையில், கணவனை இழந்த பெண்களுக்கும் கணவன் காணாமலாக்கப்பட்டு அவரைத் தேடும் பெண்ணுக்கும் இவை சிரமமாக உள்ளன” என்கிறார் முல்லைத்தீவைச் சேர்ந்த சட்டத்தரணி வி.எஸ்.எஸ் தனஞ்சயன்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பெரும்பாலும் நலிவடைந்தும் பௌதீக ரீதியான பாதுகாப்பு இன்மையாலும் அதிகளவு துஷ்பிரயோகம் உட்பட பல தரப்பட்ட விடயங்களால் இவர்கள் பாதிக்கப்படுவதாகவும் கூறினார்.



க.விமலநாதன்

பெண் தலைமைத்துவக் குடும்பங்களை வலுப்படுத்த அரசாங்கம் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் விளக்கும்போது, “பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்காக உலர் உணவு பொருட்கள் வழங்கல், சமுர்த்தி கொடுப்பனவு வழங்கல், சுயதொழில் ஊக்குவிப்புக்கு உதவுதல் உட்பட பிரதேச மகளிர் அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் ஊடாக பல்வேறுபட்ட செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களையும் இணைத்து சிறு கைத்தொழில், தோட்ட செய்கைக்கான உதவி முன்னெடுப்புகள், வழிகாட்டல்களை வழங்குகிறோம்” என்றார்.



நடராசா தசரதன்


பெண் தலைமை தாங்கும் குடும்பங்களை பொறுத்தளவிலே போசாக்கான உணவைப் பெற்றுக்கொள்ளுதல், அவர்களது பிள்ளைகளின் கல்வி எனப் பல்வேறு தேவைகளுடன் துன்பப்படுகிறார்கள். இவர்களுக்கான பல்வேறு வாழ்வாதார செயற்றிட்டங்களை புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதி உதவியில் முன்னெடுப்பதாக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலர் நடராசா தசரதன் தெரிவிக்கின்றார்.

அதேவேளையில், தமது குடும்பத்தை துயரங்களுக்கு மத்தியிலும், மன அழுத்தங்களுக்கு மத்தியில் கொண்டு நடத்துகின்ற இந்தக் குடும்பங்களுக்கான உள, நல சிகிச்சைகளும் வழங்கப்பட வேண்டியதும் அவசியமாகிறது.

சுயநல காரணங்களாலும், அரசியல் பின்னணிகளாலும் தூண்டிவிடப்பட்டு மேற்கொள்ளப்படும் இவ்வாறான மனித மோதல் சம்பவங்களுக்கான சூத்திரதாரிகள் கண்டறியப்படாத நிலைமைகளும், அவர்கள் தண்டிக்கப்படாத நிலையுமே மறுபுறம் காணப்படுகின்றது.

இத்தகைய சம்பவங்களால் பாதிக்கப்பட்டு தங்களது குடும்பத்தையும், உறவினர்களையும், பிள்ளைகளையும், கணவர்களையும் இழந்து நீதிக்காய் காத்திருக்கும் குடும்பங்கள் நீதியும் கிடைக்காமல், உரிய நிவாரணமும் கிடைக்காமல் வீதிகளிலும் ஆணைக்குழுக்களுக்கு முன்பாகவும் ஆண்டுதோறும் சாட்சியம் வழங்கும் வெறும் சாட்சிகளாகவே நோக்கப்படுகின்றனர்.

இலங்கையின் பன்மைத்துவ சமூகத்தை சீர்குலைக்கும் திட்டமிட்ட மனித மோதல்களைத் தடுப்பதற்கான சட்டரீதியான வலுவான கட்டமைப்பை உருவாக்க வேண்டியதே சாலச் சிறந்தாகும். அதேநேரம், இவ்வாறான மனித மோதல்களால் மனரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ள பெண் தலைவிகளின் குடும்பங்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கான கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பதும், அரசு என்ற ரீதியில் இப் பெண்களுக்கான உள ஆற்றுகை மற்றும் மனநல ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்பதும் இவர்களின் கோரிக்கையாக இருக்கிறது.



கென்யா

# கடவுளைக் காண்பதற்காக விரதமிருந்த 47 பேர் உயிரிழப்பு

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில், கடவுளைக் காண்பதற்காக நடுக்காட்டில் சுய விருப்பத்தின் பேரில் உண்ணா விரதமிருந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

மகென்சி என்தெங்கே என்ற மதபோதகர் உணவு, மற்றும் நீர் அருந்தாமல் காத்திருந்தால் கடவுளைக் காணலாம் எனவும், பட்டினியால் இறப்பதன் மூலம் சொர்க்கத்தை அடையலாம் எனவும் பிரச்சாரம் செய்து வந்துள்ளார்.

இதனை உண்மையென நம்பி கிளிஃபி காட்டில் உண்ணா விரதம் இருந்த 47 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் மேலும் பலர் பொலிஸாரினால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தலைமறைவான மதபோதகரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நியூசிலாந்து

# குலுங்கியது நியூசிலாந்து

நியூசிலாந்தின் கெர்ம்டெக் தீவுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று நேற்றைய தினம் (24) ஏற்பட்டுள்ளது.

பூமிக்கு அடியில் 10கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ள இந்நிலநடுக்கமானது ரிச்டர் அளவுகோலில் 7.2ஆகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்நில நடுக்கத்தால் உயிர் இழப்போ, பொருட் சேதமோ எதுவும் ஏற்பட வில்லை. இருந்த போதிலும் நிலநடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மாலி

# விமான நிலையம் அருகே குண்டு வெடிப்பு: 10 பேர் உயிரிழப்பு

மாலியில் செவரே நகரில் உள்ள விமான நிலையம் மற்றும் இராணுவ முகாம் அருகே நேற்றுமுன்தினம் குண்டு வெடிப்புத் தாக்குதலொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பத்தில் 10 பேர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் 60 க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதே சமயம் இக்குண்டு வெடிப்பினால் 20 க்கும் மேற்பட்ட கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இத்தாக்குதலுக்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





தமிழகம்

# விளையாட்டு மைதானங்களில் மதுபானத்திற்கு அனுமதி

திருமண மண்டபங்கள், விளையாட்டு மைதானங்களில் மதுபானம் பரிமாறவும், மதுபானம் பயன்படுத்தவும் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

மாவட்ட கலெக்டர்கள் அனுமதியுடன், மதுவிலக்குத்துறை சிறப்பு அனுமதி வழங்கலாம் என புதிய சட்டத்திருத்தத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம் உரிய அனுமதி பெற்று இனி திருமண மண்டபங்கள், விளையாட்டு மைதானங்களில் மதுபானம் பயன்படுத்தலாம் எனவும் கட்டணம் செலுத்தி மதுபானம் பயன்படுத்த அனுமதி பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மும்பை


# தாயைத் தாக்கியதால் தந்தையைக் கொன்ற மகன்

தாயைத் தாக்கிய தந்தையை மகனே அடித்துக்கொன்ற சம்பவம் மும்பையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மும்பை, மராட்டிய மாநிலம் தானே மாவட்டம் அபிர்நாத் பகுதியை சேர்ந்தவர் ராஜேஷ். 52 வயதான இவருக்கு மனைவி மற்றும் 19 வயதான மகன் உள்ளனர்.

இந்நிலையில் நீண்ட காலமாக , ராஜேஷுக்கும் அவரது மனைவிக்கும் இடையே கருத்துவேறுபாடு நிலவி வந்துள்ளதாகவும், இதன் காரணமாக ராஜேஷ் அவரது மனைவியை அவ்வப்போது தாக்கி வந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் மீண்டும் கணவன் மனைவி இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் இதன்போது ராஜேஷ் தனது மனைவியை தாக்கவே ஆத்திரமடைந்த மகன் கூர்மையான ஆயுதத்தால் தந்தையை சரமாரியாகத் தாக்கியுள்ளார்.



இதில் சம்பவ இடத்திலேயே பிரகாஷ் மரணமடைந்துள்ளார். இந்நிலையில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மகனைக் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# அத்லெட்டிகோ மட்ரிட்டை வென்ற பார்சிலோனா

ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை பெரன் டொரஸ் பெற்றிருந்தார்.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 76 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகின்றது. இரண்டாமிடத்தில் 65 புள்ளிகளுடன் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் காணப்படுவதுடன், 60 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்ரிட்டும், 54 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன.



# ஐ.பி.எல்: கொல்கத்தாவை வீழ்த்திய சென்னை



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு □ 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில், கொல்கத்தாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொல்கத்தா

சென்னை: 235/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஜின்கியா ரஹானே ஆ.இ 71 (29), டெவோன் கொன்வே 56 (40), ஷிவம் டுபே 50 (21), ருத்துராஜ் கைகவாட் 35 (20), இரவீந்திர ஜடேஜா 18 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுயஷ் ஷர்மா 1/29 [4])

கொல்கத்தா: 186/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜேஸன் றோய் 61 (26), றிங்கு சிங்க் ஆ.இ 53 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: மகேஷ் தீக்ஷ்ன 2/32 [4], மதீஷ பத்திரண 1/27 [4], ஆகாஷ் சிங்க் 1/29 [4])

போட்டியின் நாயகன்: அஜின்கியா ரஹானே

முன்னதாக பெங்களூருவில் நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வென்றது.

இந்நிலையில், அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸை நடப்புச் சம்பியன்களான குஜராத் லயன்ஸ் எதிர்கொள்கிறது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# நியூகாசிலிடம் தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நியூகாசில் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-6 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 75 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் காணப்படுகின்றது. 70 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி காணப்படுவதுடன், 59 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் நியூகாசிலும், அதே 59 புள்ளிகளுடன் ஆனால் கோலெண்ணிக்கை



வித்தியாசத்தில் நான்காமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட் காணப்படுகின்றது. இதில், நியூகாசில் ஒரு போட்டி அதிகமாகவும், ஆர்சனல் இரண்டு போட்டிகளில் அதிகமாகவும் விளையாடியுள்ளன.

லண்டன் மரதன்: காயம், உபாதைக்குள்ளாகி

# நின்று ஓடி வென்ற ஹஸன்

பிரித்தானியத் தலைநகர் லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற லண்டன் மரதனில் பெண்களில், ஒலிம்பிக் சுவட்டுப் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்ற சிஃபான் ஹஸன் வென்றிருந்தார்.

முன்னொருபோதும் மரதனை ஓடியிருக்காத ஹஸன், இடுப்புப் பகுதி காயத்தால் அவதிப்பட்டு, உபாதைக்குள்ளாகி ஒரு கட்டத்தில் வீதியோரமாக விலகி உடற்பயிற்சிகளை மேற்கொண்டு அதிலிருந்து விடுபட அவரின் போட்டியாளர்கள் அவரின் கண்ணுக்கெட்டாத தூரத்துக்குச் சென்றிருந்தார்.

எவ்வாறெனினும் நிறுத்தியிருக்காத ஹஸன், இறுதிக் கட்டத்தில் அவருக்குரிய பானத்தை தவறவிட்டு, பின்னர் அதை எடுத்து மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதப் பார்த்து முடிவுக் கட்டத்தில் மின்னல் வேகத்தில் சென்று வென்றிருந்தார்.

இந்நிலையில்,







ஆண்களுக்கான பந்தயத்தில் கென்யாவின் கெல்வின் கிப்டும் வென்றிருந்தார்.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

# ஜுவென்டஸை வென்ற நாப்போலி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், ஜுவென்டஸின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 78 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. 61 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லேஸியோவும், 59 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜுவென்டஸும், 56 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றோமாவும் காணப்படுகின்றது. இதில் றோமா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 25 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.